மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜூன் 2000 ஜீவியம் 6 மலர் 2

இம்மாத மலரில்..........

பொருளடக்கம்	பக்கம்
மனித சுபாவம்	2
இம்மாதச் செய்தி	19
லைப் டிவைன்	20
சிறு குறிப்புகள்	30
அன்பர் கடிதம்	32
சாவித்ரி	35
அன்னையின் ஜென்ம தினம்	37
அஜெண்டா	42
பகவானுடைய இதர நூல்கள்	44
லைப் டிவைன் - கருத்து	46
தமிழாசிரியர்	48
பிரார்த்தனை பலிக்க வேண்டும்	60

❊ ❊ ❊

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருட சந்தா ரூ.60/-

மனித சுபாவம் III

கர்மயோகி

உனக்குப் பரிச்சியமானவர்களிடம் உன்னைப் பற்றிய அபிப்ரா யத்தைக் கேட்டறிவது போன்ற விவேகமான செயலில்லை.

❈ ❈ ❈

பிறர் தம்மைப் பற்றி நினைப்பதை அறிந்தால் பெரும்பாலோர் மாறுவார்கள். நம்மைப் பற்றிப் பிறர் நினைப்பதில் நாம் 5%உம் அறியோம். இதைக் கேட்டறிய முற்பட்டால் ஏராளமான உண்மைகள் வெளிவரும். வாழ்வு அளவு கடந்து மாறும்.

ஒரு சர்க்கார் அதிகாரி இவருக்குக் குடும்பப் பாசம் அதிகம். அண்ணன், அக்கா, அவர்கள் குழந்தைகளுக்கும், உறவினர்களுக் கும், பரிசு, உதவியை, இவர் ஒரு கடமையாகச் செய்து வந்தார். 124 ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்து 15 வருஷம் கழித்து 450ரூபாய் சம்பளம் பெறும் பொழுது, இவருடைய மனைவியும் அதே சம்பளத்தைப் பெற்றிருந்தார். ஊரில் சிறு சொத்தும் இருந்தது. அன்று அவர் கணக்குப் படி உறவினர்களுக்கு 15வருஷத்தில் செய்தது ரூ. 50,000/- என்றார். இவரைப் பொருத்தவரை இது பெரிய தியாகம். துணிமணி எடுத்துக் கொடுப்பது, புஸ்தகம் வாங்கிக்கொடுப்பது, ஸ்கூல் பீஸ் கட்டுவது என அவசியமான செலவு மட்டுமே உறவினர்களுக்குச் செய்தார். தமக்கு உபரியாக வந்த **T.A., exam fees** பரீக்ஷை வருமானம் போன்றவற்றைச் சேமித்துப் பிறருக்குச் செய்வார். இதனால் இவர் பிறருக்கு ஓயாமல் உபதேசம் செய்வார். புத்தியேயில்லாதவர், நாகரீகமில்லாத மக்களிடை யே பிறந்த தாராள குணம் உள்ளவர். பட்டம் பெற்றிருந்தாலும், பிறருக்கு உபதேசம் செய்வது அநாகரீகம் என்று அறியாதவர். **(Self-opinionated person)** தாழ்ந்த மக்களிடையே பிறந்து, நாகரீகம் வளராத ஊரில் வேலைக்குப் போனவர். அதனால் இவர் புதிதாகக் கற்றுக் கொண்டதை அனைவருக்கும் சொல்வார். மண்டையில் அடித்துச் சொல்வார். நாகரீகமுள்ள இடங்களில் குழந்தைக்கும் தெரியும் விஷயத்தை இவர் பெரியவர்களிடமும் வாய் ஓயாமல் சொல்வார். இவர் வேலை செய்யுமிடத்தில் இவரை எவரும் மறுத்துப் பேசுவதில்லை. ஒரு நாள் இவர் வருவதைப் பார்த்த நான்கு கெஜட் பதவி ஆபீசர்கள், ‘டேய், அவன் வரான். வந்தால் உபதேசம் செய்வான். நான் போகி றேன்’ என்று அனைவரும் கலைந்துவிட்டனர். இவருக்கு அவர்கள் தம்மைப்பற்றி நினைப்பதை அறியமுடியுமானால் விவேகம் வரும்.

உனக்குள்ள அறிவை எந்த அளவுக்கு நீ உன் முன்னேற் றத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறாய் எனக் கணக்கிடு.

❈ ❈ ❈

உடல் உறுப்புகள் அநேகம். கடந்த ஒரு மணி நேரத்தில் பயன்பட் டவை இரண்டு மட்டுமே என்றால் என்ன பொருள்? உடலில் ஏராள மான உறுப்புகள் உள்ளன. அவை தேவைப்பட்ட நேரத்தில் செயல் படும். ஏதோ ஒரு நேரம் தேவை என்பதற்காக அவை ஏற்பட்டவை. சுறுசுறுப்பான நேரத்தில் கண்ணும், காதும், காலும், கையும் பரபரப் பாக வேலை செய்கின்றன. எல்லா நேரமும் எல்லா அவயவங்களும் செயல்படுவதில்லை. அதேபோல் நமக்குள்ள அறிவு, திறமை, ஏராளம். நாமே அதை அறிவதில்லை. ஏனெனில் நாம் அவ்வப்பொழுது தேவைப்பட்டவற்றையே பயன்படுத்துகிறோம். முக்கியமான நேரங்களில் பார்த்தாலும், பதவியிலுள்ளவர் செயல்படுவதைப் பார்த்தாலும், செல்வர் வீட்டில் இரண்டு நாள் அவரைப் பார்த்தாலும், ஏராளமான திறமைகள் அடிக்கடி பயன்படுவதைப் பார்க்கிறோம்.

நம்மால் நம் அறிவையும், திறமையையும் அதிகமாகப் பயன்படுத்த முடியும். அப்படிச் செய்வதால் அதற்குரிய நிலையை எட்ட முடியும்.

ஒரு காலத்தில் நீ இலட்சியமாகப் போற்றியதே, உன் மன வளர்ச்சியை உச்சகட்டத்திற்குக் கொண்டு போகும்.

❋ ❋ ❋

இளமையில் ஏற்றுப் போற்றிய இலட்சியம், உத்தியோகம், குடும்பம் வந்தபின் மறந்து பின்னணிக்குப் போகிறது. 'இதெல்லாம் பார்த்தால் இனி முடியாது' என்று 'விவேகம்' ஏற்படுகிறது. 60வயதைத் தாண்டியவர், தங்களையும், தாங்கள் அறிந்தவரையும் நினைவுபடுத்தி ஏற்ற இலட்சியத்தைக் கைவிட்டவரையும், கடைசிவரை கடைப் பிடித்தவரையும் பார்த்தால், இலட்சியத்தைக் கடைப்பிடித்தவர் தொடர்ந்து உயர்ந்ததையும். மற்றவர் பின் தங்கியதையும் காணலாம்.

பொதுவாக மனிதன் இலட்சியத்தை ஏற்பதில்லை. ஏற்றால் சீக்கிரம் கைவிட்டு விடுவான்.

முன்னேற்றத்திற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் இலட்சியமும் ஒன்று,

'நண்பர்களைப் பிரிவதில்லை என்பதே என்னைக் காப்பாற்றியது'.

'ஸ்தாபனத்திற்குச் செய்த தொண்டை நிறுத்தவில்லை என்பதால் இன்று தலைவராக இருக்கிறேன்'.

'எதிரி வாயாலும் நல்ல பெயர் வாங்க முயன்றதால் இன்று செல்வராக இருக்கிறேன்'.

'தொழிலில் நாணயத்தைக் குறைக்கவில்லை என்பதால், வியாபாரம் 100மடங்கு பெருகியது' என்பவர்களைக் காணலாம்.

ஒவ்வொரு முறை சிந்திக்கும்பொழுது 25% அதிகம் புரியுமளவுக்கு முயல வேண்டும்.

❋ ❋ ❋

பொதுவாக ஒரு வேலை வந்தால், அது தடையில்லாமல் நடந் தால் நாம் சிந்திப்பதில்லை. தடை ஏற்பட்டால், குறை ஏற்பட்டால் சிந்திக்கின்றோம். ரேடியோ, **T.V, moped** மோபெட், பட்டுச் சேலை, தங்க நகை, வைரம், காலேஜ் அட்மிஷன் ஆகியவற்றை முதன் முறையாக அணுகுபவர், பணமிருந்தால் வாங்கிக்கொண்டு போவார். அதற்கு மேல் சிந்திப்பதில்லை. இவற்றுள் எத்தனை விஷயம் பொதிந்துள்ளது என்பதை அவர் அறியார். ஒவ்வொன்றிலும் சுமார் 10 அல்லது 20 முக்கியமான விஷயங்கள் அடங்கியுள்ளன. அனுபவ முள்ளவருக்கே அது தெரியும். இவரே சுமார் 10 அல்லது 20 முறை இவற்றை வாங்கினால் அதனுள் உள்ள **discount** கமிஷன், பரிசு, தவணை முறை, கம்பனி பிராண்ட் ரகசியம் போன்றவற்றை அவர் அறிவார். கையில் பணமிருப்பதால் வாங்கிக் கொண்டு போகாமல், சிந்தித்தால் சற்று அதிகமாகப் புரியும். கடையில் சாமான் வாங்குவது மட்டுமன்று வாழ்க்கையில் எதையும் பற்றி யோசனை செய்வது நல்லது. முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சற்று அதிகமாகச் சிந்திப்பது பலன் தரும். வாழ்க்கையையே மாற்றவும் உதவும்.

விவரமில்லாமல் இலட்சியங்களை ஏற்றவனாக இருந்தால் அவற்றை விவரமாகத் தெளிவாக ஏற்றுக் கொள்ளுதல் நலம்.

❋ ❋ ❋

கீதையைப் படித்துப் பலன் கருதாமல் வேலை செய்ய வேண்டும் என்பது, எந்த ஸ்தாபனத்தில் இருக்கின்றோமோ, அதையே தாயாகக் கொள்ள வேண்டும் என்பது போன்ற இலட்சியங்களை, ஏதோ கேட்டோம், பின்பற்றுகிறோம் என்றில்லாமல், அதன் உட்கருத்தை அறிந்து ஏற்றுக் கொண்டால் பெரும்பலன் வரும்.

ஸ்தாபனம் என்பது உயிருள்ளது. அதற்கு நாம் செய்யும் வேலை யை வேலையாகச் செய்யலாம். சேவையாக செய்யலாம். நாம் எதைச்

செய்கிறோமோ, அதை அது ஏற்றுக் கொள்ளும். நாம் மறக்கலாம். அது மறக்காது. நமக்கு அவசியமாகத் தேவைப்பட்டபொழுது அது உதவும் வகை அற்புதமாக இருக்கும். நேரடியாக உதவ முடியாவிட்டால் மறைமுகமாக உதவும். ஆனால் உதவத் தவறாது. நாம் நினைவுபடுத்தத் தேவையில்லை. அதன் வேலையை அது தவறாது, தாமதிக்காமல் தானே செய்யும்.

ராணுவத்தில் சேவை செய்தவர் இறந்த பின், அவர் வாங்கிய மனையை, சர்க்கார் சொல்பத் தொகைக்கு எடுத்துக் கொண்ட பொழுது இறந்தவர் மகன் தன்னால் ஆனவற்றையெல்லாம் செய்து கைவிட்ட நிலையில், யாரோ ஒருவர் சொன்ன யோசனையின் பேரில் மாஜி ராணுவ ஊழியர் சங்கத்தின் உதவியைத் தபால் மூலம் கேட்டார். பதில் தந்தி மூலம் வந்து முழுப் பலனை அளித்தது.

எந்த ஸ்தாபனமும் தான் பெற்ற சேவையை மறப்பதில்லை என்பதை அறிந்து இன்று வேலையைச் சேவையாகச் செய்தல் கண் மூடியாகச் செய்வதைவிட நல்லது.

பலனைக் கருதி வேலை செய்தால், பலனை நாம் பெறுகிறோம். பலன் கருதாமல் வேலை செய்தால் பலனை நம்முள் உள்ள ஆன்மா பெறுகிறது. நாம் பெறும் பலனை விட அது அதிகமானது. ஆன்மப் பலன் என்பதால் உயர்வானது. இந்த விளக்கம் தெரிந்து செய்தால் தெரியாமல் செய்வதை விட நல்லது.

பிறருக்கு உழைப்பதே வாழ்வாக உனக்கு அமைந்து நீ கீழ் மட்டத்தில் தள்ளப்பட்டிருந்தால், இன்று அதை நீ நிறுத்த வேண்டும். இதுவரை நீ அதை அறியாமலிருந்தால், இன்று உனக்கு அது புரிந்தவுடன், விழிப்பின் பலன் ஏராளம்.

❋ ❋ ❋

பிறருக்கு உழைப்பது சேவை, தாராள மனப்பான்மை. அது உயர்ந்தது. திறனில்லாதவரை அனைவரும் வேலையிடுவார்கள். மறுக்க முடியாமல் செய்ய வேண்டியிருக்கும். அது இயலாமை. இது இரண்டும் போக, வலிமையற்றவன் தன் இயலாமையை அறியாமல், பிறருக்கு உழைக்கும் இலட்சியத்தை ஏற்றால், பூர்த்தியாவது இலட்சிய மில்லை, தன் இயலாமையே பூர்த்தியாகும். காலத்திற்கும் அதை இலட்சியமாகவே எண்ணி மகிழ்பவருண்டு. நான் அவர் போன்ற வரைக் குறிப்பிடுகிறேன். வலிமையிருந்து சேவை செய்தாலும், இலட்சியமாகச் செய்தாலும், செய்பவர் உயர்ந்தபடியிருப்பார். வாழ்வின் கீழ்மட்டத்தில் தள்ளப்பட்டிருந்தால், அது திறனற்ற நிலையையே குறிக்கும். சற்று யோசனை செய்து, இனி நமக்கு இது தேவையில்லை என்று நிறுத்தினால், வேலை மிச்சம், ரூபாய் மிச்சம், ஏமாற்றம் மிச்சம். நல்லனவெல்லாம் இனி அவர் வீட்டில் நடக்கும்.

வாழ்வின் வெற்றியில் உச்சகட்டத்தை நீ அடைய வேண்டுமானால், நீ ஆரம்பக் காலத்தில் போற்றிப் புகழ்ந்த மனிதரோ, இலட்சியமோ, கொள்கையோ உதவும்.

❋ ❋ ❋

இள வயதை அறியாத பருவம் என்கிறோம். அனுபவத்தைக் கொண்டு பார்த்தால் அறியாத பருவம் இளமைப் பருவம். ஆன்மீக விழிப்புக் கோணத்தில் பார்த்தால், இளம் வயதில் இவ்விழிப்பு அதிகம். ஆன்மீக விழிப்பை நாம் நம் பாஷையில் சொல்லும்பொழுது கபடு சூது அறியாத பருவம் (**innocent age**) என்கிறோம். அந்த வயதில் நாம் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டால், அதில் உண்மையிருக்கும். ஒருவரைத் தலைவராக மதித்து ஏற்றால் அதில் சத்தியமிருக்கும். வயதான பின் லாப நஷ்டம் கருதி அதை இன்று விட்டுவிட்டிருந்தால் மீண்டும் அதையே கருதி ஏற்றுக் கொண்டால், வாழ்வில் அதிகபட்ச வெற்றி கிட்டும். அதைவிட அதிக வெற்றி கொடுக்கும் சந்தர்ப்பம் இனி உனக்கு வரப் போவதில்லை.

ஆன்மா மலர்ந்த நேரம் கிடைத்த சந்தர்ப்பமே வாழ்வில் அரியது. அதைப் புறக்கணித்து, தவறு என்று உணர்ந்து, மீண்டும் அதை நாடினால் அதிகபட்சப் பலன் கிடைக்கும்.

வயதால் அது அற்புதமான நேரம். அன்னையை ஏற்றுக் கொண்டபின் புனர் ஜென்மம் எடுப்பதால், அதன் பிறகு நாம் அறிந்து, விரும்பி ஏற்பவை அதே போன்றவை. சற்று உயர்வானவையும் கூட. அவற்றைப் பிறகு புறக்கணிக்கக் கூடாது. அன்னையை அறிவது தீட்சை பெறுவது. இரண்டாவது திருஷ்டி ஏற்படும் நேரம். அது சமயம் நம்மை நாடி வருவதும், நாம் நாடிச் செல்வதும் ஆன்மீக மெருகுடனிருக்கும். ஆதாயக் கணக்குப் போட்டு, நம் அனுபவத்தால் சீர்தூக்கிப் பார்த்து அதை விலக்குதலோ அதனின்று விலகுதலோ தவறு.

உன் குடும்பத்தினர், நண்பர்கள் மீது உனக்கு எந்த அளவு பொறாமையிருக்கிறது எனச் சோதனை செய். விலக்குதல் பலன் தரும்.

❈ ❈ ❈

இது போன்று பொறாமையில்லாதவருண்டு. இருப்பவரும் உண்டு. அக்கா பையன் M.A. பாஸ் செய்துவிட்டான் என்றால் மனம் பொறுக்காமல் இருப்பதுண்டு. தம்பி I ராங்க் வாங்கினால் அடுத்த நாள் அவனோடு சண்டை போட்டுப் பேசாமலிருக்கும் அண்ணன் உண்டு. பெற்றோர் திறமை, நல்ல குணத்தைக் கண்டு பொறாமைப்படும் குழந்தைகளும் உண்டு. இதுபோன்ற பொறாமையை மனம் ஏற்க முன் வந்தால், அது மனமாற்றம். அம் மனமாற்றம் வாழ்வில் ஏற்றத்திற்கு வழி செய்யும். இதையறியாமலிருப்பவருண்டு. அறிந்து ஏற்றுக் கொள்ள மனமில்லாதவருண்டு. அறிவது ஞானம், ஏற்றுக் கொள்வது (sincerity) சத்தியம். மாறுவது திருவுருமாற்றம்.

குறைவா, நிறைவா என்பதைவிட்டு அறியாததை அறிவது ஞானம் என்று கொள்ளவேண்டும். ஞானம் ஏற்பட்டபின் அதை ஏற்க

மனம் விழையாது. ஏற்றால் மனத்தில் உண்மையிருக்கிறது என்று பொருள். ஞானம், சத்திய ஞானமாகிறது. ஏற்று மாற உள்ளே இடம் கொடுக்காது. மாற சம்மதப்பட்டு மாறினால், ஞானம், ஜீவியமாகிறது, சத்திய ஞானம் சத்திய ஜீவியமாகிறது. அதுவே அன்னை.

அர்த்தமற்ற முறையையும் முழுமையாக ஏற்றுப் பயின்றால் உன் நிலை 5 மடங்கு உயரும். இத்தலைப்பில் உனக்கு ஒத்துவரும் மிகப் பெரிய சூத்திரத்தை (உபாயத்தை) மேற்கொள்ள வேண்டும்.

❈ ❈ ❈

உண்மை, போலி என்பவை தெளிவாகப் பிரிந்து நிற்கும். விஷயமும் தோற்றமும் அப்படியே. உண்மையையும், விஷயத்தையும் போற்றுகிறோம். போலியையும், தோற்றத்தையும் தவிர்க்கிறோம். நம்மிடம் உண்மையுமில்லை, விஷயமுமில்லை என்ற இடம் உண்டு. அதுபோன்ற இடத்தில் ஒன்றுமில்லாமலிருப்பதற்குப் பதிலாக தோற்றத்தை மேற்கொண்டால் பலன் தருவதுண்டு. அதையும் முழுமையாக ஏற்றால் பலமடங்கு பலன் நிச்சயமாகத் தெரியும்.

படிப்பு விஷயம், பட்டம் தோற்றம்; அழகு உண்மை, உடை போலி; பண்பு உயர்ந்தது, (வெளி) பழக்கம் (external behaviour) சாரமற்றது; அன்பு உண்மை, உபசாரம் வெளித்தோற்றம்; தபஸ் சக்தி வாய்ந்தது, பூஜை தோற்றத்திற்குரியது, புரிவது விஷயம், மனப்பாடம் விஷயமில்லாதது; இருந்தாலும் தோற்றத்திற்கு உரியவற்றையும் முழுமையாகப் பின்பற்றினால் சிறந்த பலன் உண்டு.

பட்டத்தால் உயர்ந்தவர் உண்டு. உடையே நிலையை நிர்ணயிப்பதைப் பார்க்கிறோம். பழக்கத்திற்குண்டான பலன் பெரியது. உபசாரத்தில் பேர் போனவருக்குப் புகழ் மாலை கிடைப்பதுண்டு. பூஜை செய்து பெறமுடியாத பலனில்லை, மனப்பாடம் செய்து வாங்காத பரிசில்லை.

தரத்தில் குறைவானதானாலும், அதற்கும் ஒரு சக்தியிருப்பதால் அதை முழுமையாக, உண்மையாகப் பின்பற்றுவதால் (நாமிருக்கும் நிலை அடிபாதாளம் என்பதால்)நம் நிலை 5மடங்கு உயரும். உண்மைக்கே உயர்வு என்பது ஏற்கனவே உயர்ந்த நிலையில் உச்ச கட்டத்திலிருப்பவருக்கு. பொதுவாக நாம் மிகத் தாழ்ந்த நிலையிருப்ப தால், மனப்பாடமே பெரும்பலன் தருகிறது. உடையே உயர்த்த முடியும்.

படிப்பது, சமைப்பது, துணி துவைப்பது, (packing) பொருள் களைக் கட்டுவது, டைப்பிங் போன்ற எல்லாவற்றிலும் நம் திறமையை 25% அதிகப்படுத்துவது பயன் தரும்.

❋ ❋ ❋

குடும்பங்களின் தரத்தை 1 முதல் 10 வரை பிரித்தால் 5ஆம் நிலை குடும்பத்திற்கும், 6ஆம் நிலை குடும்பத்திற்கும் இது போன்ற செயல் களில் திறமை 25% வித்தியாசமாக இருக்கும். இந்த 25% திறமையை அதிகப்படுத்தினால் குடும்பம் ஒரு நிலை உயரும். ஏதாவது ஒரு விஷயத்தில் உயர்த்தினால் இப்பலன் கிடைக்காது. அதுவே முடியாது. எல்லா விஷயங்களிலும் உயர்த்தினால்தான் குடும்பநிலை உயரும்.

சிறு விஷயமானாலும் எல்லா விஷயங்களின் தரத்தை உயர்த்த பெருமுடிவு தேவை. பெருமுடிவு சிறு விஷயத்தில் வெளிப்பட்டால் எல்லா இடங்களிலும் தெரியும். எல்லா இடங்களிலும் தெரிவதால் அது பெரியதாக இருக்கும். பெரும்பலன் தரும்.

அடுத்தவர்க்கு நல்லது செய்வதை அடிக்கடி செய்ய முனைந்தால் நீ வானளாவ உயர்வாய்.

❋ ❋ ❋

மனிதன் நல்லவன். அவன் நல்ல குணத்திற்கு அளவுண்டு. அந்த அளவைச் சற்று உயர்த்தினால் பலன் உயர்த்திய அளவுக்கு வாராது.

ஏராளமான அளவுக்கு உயரும். நல்ல குணம் சிறியதானாலும், முக்கியமானதால், அதன் பலன் பெரியது. முதலாளி வீட்டுப் பெண் தோட்டத்திற்கு வந்தாள். அங்குள்ள சிறுவனுக்கு 3சாக்கலேட் கொடுத்தாள். அடுத்த நிமிஷம் அவன் அக்கா ஓடி வந்தாள். வேறு சாக்கலேட் இல்லை. 'டேய், எனக்கு ஒன்று கொடுடா' என்று கெஞ்சி னாள், மூன்று சாக்கலேட் வைத்துள்ள சிறுவனுக்கு அக்காவுக்கு ஒன்று கொடுக்க மனம் வரவில்லை. மனம் மற்றவர்க்கு உதவி செய்ய எல்லோருக்கும் வாராது. தனியாகக் காரில் போகும் பொழுது, வழியில் நிற்பவரை 10மைல் அழைத்துப் போவது தன் சொத்தெல்லாம் கொடுப்பதுபோல் நினைப்பவரும் உண்டு. பரீட்சைக்கு அவரசமாகப் போகும் மாணவன் மோட்டார் பைக்கை ஸ்டார்ட் பண்ண முடியாமல் திணறுகிறான். அவசரம் கெடுக்கிறது. அருகிலுள்ளவருக்கு அவன் செய்யும் தவறு தெரிந்தால், அதை எளிதில் ஸ்டார்ட் பண்ண முடியும் என்றால் அந்த உதவியைச் செய்பவர் பலர். கேட்டால், 'என்னை ஏன் உன் வேலையைச் செய்யச் சொல்கிறாய்?' என்று எரிந்து விழுபவர் சிலர். 9.30 மணிக்குப் படுக்கையில் படுத்துவிட்டபின் ஃபேன் போட மறந்து விட்டதால், எழுந்துபோட வேண்டும். அங்கு வரும் அண்ணனை போடச் சொன்னால், அந்த ஒரு சிறு காரியத்தைத் தம்பிக்குச் செய்வது சுயநலமிக்கு மண்டை வெடித்து விடும் போலிருக்கும். கேட்டாலே ஆத்திரம் வரும்.

நல்லவருக்கும், உதவி செய்பவர்க்கும் ஓர் அளவு உண்டு. அதைச் சற்று உயர்த்தினால் கோபம் வரும். ஆபீஸ் மேஜையில் இருக்கும் 15 பேப்பரில் இரண்டு பேப்பருக்கு உரியவர் வந்திருக்கிறார் கள். பொதுவாக மாலை கையெழுத்துப் போடுவது வழக்கம். இந்த இரு பேப்பரில் கையெழுத்துப் போட்டுவிட்டால் அவர்களிருவரும் இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டாம் என்றால், அதை இதுவரை செய்யாதவருக்கு, மனம் வாராது. 'பிறருக்கு நான் உதவி செய்ய நான் என்ன ஏமாளியா?' என்ற கேள்வி மனதில் எழும். இதை மாற்றி உதவி மனப்பான்மையுடன் செயல்படுவது அவரைப் பொருத்தவரையில் ஒரு மனப்புரட்சி, யுகப்புரட்சி எனவும் சொல்லலாம். காரியம் சிறியது,

பலருக்கு ஒன்றுமில்லாதது, ஆனால் இவருக்கு முடியாதது. முடியா ததை முடிய வைப்பது புரட்சி. புரட்சி என்பதால் ஏராளமான சக்தி எழும். அதை தினமும் ஒரு முறை செய்தால், வாழ்வில் புரட்சி ஏற்படும்.

'4பேர் உள்ள வீட்டில் சமைத்த சாப்பாட்டை மகனுக்கு எடுத்துப் போட்டால் நான் குறைந்து விடுவேன். அவனே போட்டுக்கொண்டு சாப்பிடட்டுமே' என்ற தாயாருக்கு மகனை எதிர்பார்த்து தானே சாதம் போட முன் வருவது பெரிய மாற்றம். அந்தக் குணம் உள்ளவர்க்கு அந்த மாற்றம் பெரியது. அதை நாடினால், அடிக்கடியும் அதுபோன்ற காரியத்தைச் செய்ய முயன்றால், அவர் மனநிலையும், வாழ்வு நிலையும் உயரும்.

நம்மைவிட உயர்ந்த நிலைமையோடு தொடர்பு கொண்டால், குறையான பிரச்சினை எதிர்பாராமல் தீரும். தீரும் வகை உயர்ந்த நிலையைப் பிரதிபலிக்கும்.

❋ ❋ ❋

பண்புள்ள குடும்பத்தில் படிப்பின் பெருமைக்காக கூலிக்காரக் குடும்பத்தில் சம்பந்தம் செய்து 100 வருஷப் பலனை ஒரு நிமிஷத்தில் அழித்துக் கொண்டனர். அடுத்த சம்பந்தம் செய்ய இவர்கள் முனையவில்லை. ஒரு மகானிடம் தொடர்பு இருந்ததால், அவரே இதில் ஆர்வம் காட்டினார். ஆர்வம் பலனாக முடிந்தது. பலன் சம்பந்தமாக மட்டும் இல்லாமல், உயர் பண்புள்ள சிறந்த குடும்பமாகவுமிருந்தது. முதல் சம்பந்தத்திற்கு நேர் எதிராக இருந்தது.

மகானுடைய கடமை ஆசீர்வாதம். நெருக்கம் காரணமாகப் பெரியவர் குடும்ப விஷயத்தில் அக்கறை காட்டினார். திருமணம் வாழ்க்கைக்குரியது. மகான் நிலை உயர்ந்தது. திருமண ஏற்பாட்டில் உயர் நிலையில் உள்ளவர் நேரடியாக அக்கறை கொண்டதால், நிலைமை உயர்ந்தது. பிரச்சினை தீர்ந்தபொழுது முதலில் ஏற்பட்ட குறையை ஈடுகட்டும் வகையிலிருந்தது.

நம்மைவிட உயர்ந்த நிலையோடு தொடர்பு கொண்டால், விஷயத்தின் தரம் உயரும்.

அழிவைத் தரும் முறைகளை வலியுறுத்திப் பின் பற்றினால் அழிவு நிச்சயம்.

❋ ❋ ❋

இது உலகம் அறிந்ததாயிற்றே என்று தோன்றுகிறது. ஆனால் இன்று நமக்குத் தெரிந்த 15பேர் கெட்டுப் போயிருந்தால், அதில் 5பேராவது இந்தச் சட்டத்தின்படி அழிந்திருப்பார்கள்.

தீட்டிய மரத்தில் கூர்பாய்ச்சுவது,

குருத் துரோகம்,

வாழ்விலுள்ள ஒரே ஆதரவைக் கேலி செய்து ஒதுக்குவது,

குரங்கு ஆப்பைக் கழற்றி உயிரை இழந்தது,

பொன் முட்டையிடும் வாத்தை அறுத்தது,

உணவூட்டும் கையைக் கடிப்பது,

தான் சாக மருந்து சாப்பிடுவது,

வாழும் பெண்ணைத் தாயார் கெடுப்பது,

கருடா சௌக்கியமா என விசாரிப்பது,

அருள் பிரசாதத்தைப் புலை நாயின் முன் வைப்பது,

மெய்யை இலட்சியமாகக் கொண்டு அதை அடைய பொய்யைக் கருவியாக்குவது,

உயிர்க் காப்பாற்ற வந்த டாக்டரை, வைத்திய செலவு செய்ய எதிர் பார்ப்பது,

ஆகியவை அறிவீனம். அவற்றைப் பின்பற்றினால், அழிவு வரும் என்பதை உலகம் ஆயிரம் ஆண்டுகட்கு முன் அறிந்துள்ளது.

30, 40 வயதானவர்கள் தங்கள் அனுபவத்தில் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக உள்ள நிகழ்ச்சிகளை 5, 6ஆவது நினைவுபடுத்த முடியும். நம் சொந்த வாழ்விலே அது இருக்கவும் முடியும். மற்றவர்கள் நமக்குப் பிரச்சினையில்லை. நாமே நமக்கு முக்கியம். இது நம் வாழ் வில் இருந்தால் அதை விலக்க நாம் முன் வர முடியுமா? என்பதே கேள்வி.

திவாலான மனிதன் இழந்ததைப் பெற முயல்வதைப் பார்த்தால் மனித முயற்சியின் தீவிர உச்சகட்ட நிலைகள் விளங்கும். உன்னாலும் அதுவே முடியும். ஆனால் நீ சும்மா இருக்கிறாய். அதே முயற்சியை முன்னேற நீ எடுக்க முன் வரவேண்டும்.

* * *

உயர்ந்தவன் சுபாவத்திலேயே உயர்ந்தவன் என்பது நம் கருத்து.

நேரம் வரும்பொழுது முயற்சி வெளிப்பட்டால் அது தவறு என்று தெரிகிறது.

ஆதாயத்திற்காக மனிதன் சிந்தித்தால் இதுவரை இல்லாத அறிவு வரும்.

கடுமையான நேரம், அவசரமான காரியம், ஆதாயமான வாய்ப்பு, கிடைக்காத சந்தர்ப்பம், நினைக்க முடியாத நிலை, வந்தால் மனிதன் எவனுக்கும் வரும் சுறுசுறுப்பு, யோசனை, சமயோசிதம், சாதுர்யம், சாமர்த்தியம், நினைவாற்றல், இதுவரை எவர்க்கும் இல்லாத அளவுக்கு ஏற்படும்.

இவ்வளவும் தானே செயல்படாது.

பிறருக்காகச் செயல்படாது.

கடமைக்காகவும், இலட்சியத்திற்காகவும் செயல்படாது.

நடக்கும் எனத் தெரிந்தால் வெளியே வரும்.

நம்பிக்கையிருந்தால் நல்லனவெல்லாம் மேலே வரும்.

தனக்கு மட்டும் கிடைக்கும் என்றால், அபாரசக்தி வெளிப்படும்.

இதுவரை அது உன் வாழ்வில் நடந்திருக்கிறதா எனப் பார்.

நிச்சயமாக இருந்திருக்க முடியும்.

இல்லாவிட்டாலும் இனி முடியும்.

ஏன் நீ அதைச் சாதிக்கக் கூடாது?

திவாலான பின் எடுக்கும் முயற்சியை, இப்பொழுது எடு.

அது உன்னை உச்சகட்டத்திற்குக் கொண்டு போக உதவும்.

நீ உன்னையறியவில்லை என்பதை அறிய வேண்டும்.

உன்னால் எதுவும் முடியும் என்பதை அறிய வேண்டும்.

உன்னால் முடிந்ததை நீ பெறாமலிருப்பது சரியில்லை.

இதை உடனே செய்ய வேண்டும்.

உடனே செய்தால் புரிகிறது என்று பொருள்.

தாமதித்தால் புரியவில்லை என்று பொருள்.

பயத்தால் நீ பணிந்தால், அல்லது வேறெந்தக் காரியம் செய்தாலும், அதைப் புரிந்து கொண்டு அறிவால் செய்யப் பழகிக்கொள்.

* * *

போலீஸ்காரன் டிராபிக் சிக்னலில் உன்னை நிறுத்தினால் போலீஸுக்குப் பயந்து நிற்பது உன் பழக்கமானால், அதைச் சற்று விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் மட்டும் நிற்கவில்லை, அனைவரும் நிற்கிறார்கள், நிறுத்துவது அவன் கடமை, நிறுத்தாவிட்டால் குழப்பம் ஏற்பட்டுத் தொந்தரவு, விபத்து ஏற்படும். நான் போலீஸுக்குப் பயப்படுவது அவசியமில்லை, பயத்திற்குத் தேவையில்லை, நெடுநாளாக நான் போலீஸைக் கண்டு பயப்பட்டேன். இன்றும் பயப்படுகிறேன். என்னைப் போலீஸ் நிறுத்துவதற்கும், பயத்திற்கும் இங்குச் சம்பந்தமில்லை என்ற தெளிவு ஏற்பட வேண்டும்.

பயத்தால் நாம் பணிவது பல இடங்களில். பயந்து நேர்மையாக இருக்கிறோம். பயந்து கடமையைச் செய்கிறோம், பயந்து நல்லவனாக இருக்கிறோம். பிள்ளைகள் அடங்காவிட்டால், ‘கொஞ்சமாவது பயமிருக்கிறதா பார்’ எனக் கடிந்து கொள்கிறோம். ‘நான் கடவுளுக்குப் பயந்து நடப்பவன்’ என்பது அனைவரும் நினைப்பது. பயம் வந்தால் அங்கு பக்திக்கு இடம் இல்லை.

பாவத்தைவிடப் பயம் பொல்லாதது. பாவம் செய்து மீளலாம். பயத்தை ஏற்றபின் மீள முடியாது. பயம் நம்மைச் சூழ்நிலையிலிருந்து பிரித்து, சொந்த முயற்சியால் காப்பாற்றும் உணர்வு. வெளியில் உள்ள பயம் வீட்டிலிருக்காது. வெளியூரில் உள்ள பயம் உள்ளூரிலிருக்காது. சூழ்நிலையிலிருந்து பிரிந்தால் பயம் வருகிறது. பரமாத்மாவிடமிருந்து ஜீவாத்மாவை அகந்தை பிரித்தது. அதன் விளைவாகப் பயம் உற்பத்தியாயிற்று. பரமனை நோக்கிச் செல்லும் பாதையில் பயத்தை விட்டொழிப்பது முக்கியம்.

பயத்தால் ஒருவர் செய்யும் அவ்வளவு காரியங்களையும், பயத்தை விட்டொழித்துச் செய்தால் படிக்காத கூலிக்காரன் பட்டம் பெற்றவன் நிலையை அடைந்தது போலிருக்கும்.

சமூகத்திற்காகச் செய்வதை நீ மனச்சாட்சிக்காகச் செய்ய வேண்டும்.

❊ ❊ ❊

ஆசைக்காகச் செய்வதைக் கடமைக்காகச் செய்.

கடமைக்காகச் செய்வதை ஆர்வத்திற்காகச் செய்.

ஆர்வத்திற்காகச் செய்வதை அன்பிற்காகச் செய்.

அன்பு மனச்சாட்சியை நடத்தினால் மனச்சாட்சிக்காகச் செய்.

மனச்சாட்சிக்காகச் செய்வதை மனம் உயர்வதற்காகச் செய்.

மனத்திற்காகச் செய்வதை ஆன்மாவுக்காகச் செய்.

ஆன்மாவுக்காகச் செய்வதை அன்னைக்காகச் செய்.

அன்னைக்காகச் செய்வதை ஆண்டவனுக்காகச் செய்.

ஆண்டவனுக்காகச் செய்வதை உன்னுள் உள்ள ஆண்டவனுக்காகச் செய்.

அவனுக்காக நீ செய்வதைவிட நீயே அவனாக மாறி நீயே அதைச் செய்.

மனிதன் இறைவனாவதே பரிபூரண யோகம்.

முன்னேற்றம் வேண்டும் என்று ஆர்வமாக முடிவு செய்தவராக இருந்தால் அதை ஒரு மந்திரமாக, 'நான் நிச்சயம் முன்னேற வேண்டும்' என்று எழுதி இடைவிடாமல் அதை உச்சரித்தபடி இருந்தால் அதன் மந்திரச் சக்தி மலை போல எழும். அம்முன்னேற்றத்தை அதுவே பெற்றுத் தரும்.

❊ ❊ ❊

வாயால் உச்சரிக்க ஆரம்பித்ததை, மனதில் மௌனமாக ஆனால் இடைவிடாமல் உச்சரிக்க வேண்டும். மனத்திலும் சொல் அழிந்து மௌனமாக எண்ணம் சொல்லில்லாமல் முன் போலவே இடைவிடாமல் மனதை ஆட்கொள்ள வேண்டும். இக்கருத்து உன் உணர்ச்சியைக் கிளறி, எதிர்காலம் உயர்வானது என்ற உணர்வைக் கொடுக்க வேண்டும். இந்த ஆர்வம் உணர்வு மையமான நெஞ்சுக்குப் போய் நெஞ்சை நிரப்ப வேண்டும். தொடர்ந்து ஆர்வம் உடலை எட்டித் தொட்டு நின்று நிலவி உடலெல்லாம் பரவி, அணுக்களுக்குள் சென்று, அங்கிருந்து ஆர்வக்குரல் அமைதியான மௌன சக்தியாக எழவேண்டும். உடலை ஆர்வம் தொட்டவுடன் தானே அது தன்னைப் பூர்த்தி செய்து கொள்ளும். இது தவமுயற்சி. இம்முயற்சி முழுப் பலனுள்ள முன்னேற்றத்தைத் தரும். இவற்றைப் பலநிலைகளாகப் பிரித்துக் கீழ்க்கண்டவாறும் சொல்லலாம்.

1. முடிவு,
2. முடிவின் முழுமை,

3. முடிவை உணர்வு ஆர்வமாக ஏற்றுக் கொள்வது,
4. முடிவுக்கு உருவம் கொடுத்து மந்திரமாக எழுதுவது,
5. வாயால் உச்சரிப்பது,
6. மௌனமாக மனதால் சொல்வது,
7. சொல்லில்லாமல் மனதால் உச்சரிப்பது,
8. மனம் முழுவதும் மந்திரத்தால் ஆட் கொள்ளப்படுவது,
9. உணர்வு ஏற்பது,
10. உணர்வு மனம்போல் முடிவை உச்சரிப்பது,
11. உடல் உணர்வும் அதனால் ஆட்கொள்ளப்படுவது,
12. உடல் உணர்வே முன்னேற்றத்தை ஆர்வமாக எதிர்பார்ப்பது,
13. உடலே இலட்சியத்தை விரும்பி ஏற்பது,
14. உடல் இலட்சிய உணர்வால் நிரம்புவது,
15. முன்னேற்றமே என் உயிர் மூச்சு என்றாகி உடல் முன்னேற்றத்திற்காக இரவு பகலாக ஏங்குவது.

முன்னேற்றத்திற்கு இதுபோல் செய்வதை, நாம் விரும்பும் எதற்காகவும் செய்யலாம். முறை ஒன்றே. பலன் முழுமையான ஈடுபாட்டைப் பொருத்தது.

தொடரும்.

* * *

ஜீவிய மணி

சாதனை என்பது மனமாற்றம்.

இம்மாதச் செய்தி

நினைவுக்குப் பதிலாக அன்னையும், உணர்வை நீக்கி அன்னையை உணர்வதும் ஜீவன் அன்னையாக மாறும் செயல்கள். ஜீவனை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால் அது புறப்பட்டு அன்னையுடன் கலப்பதை உணரமுடியும். அத்துடன் அன்னையின் ஜீவன் நம்மை வந்தடைவதும் தெரியும். இரண்டறக் கலக்கும் சித்தியின் முதல் அனுபவம் அது.

* * *

லைப் டிவைன்

கர்மயோகி

VIII. The Methods of Vedantic Knowledge

Page No: 65
Para No: 9

Vedanta values identity.
It seeks supreme self-existent identity.
That is the only valuable thing for Vedanta.
Mental experience is only mental identification.
Reason has concepts.
They too are only mental identifications.
At best, they are reflections in mental identifications.
Vedanta never valued them.
We must exceed mind.
We must go beyond reason.
The reason is active in us.
It is active in our waking consciousness.
Our evolution is upwards.
We come to it from the subconscient ALL.
Evolution pushes us upwards.
The superconscient ALL is there up.
Reason mediates between both.
The ALL formulates itself.

8. வேதாந்த ஞானம்

ஐக்கியம் வேதாந்தத்திற்கு முக்கியம்.
பரம்பொருளோடு வேதாந்தம் ஐக்கியத்தை நாடுகிறது.
அதுவே வேதாந்தத்தின் விசேஷம்.
மனம் ஐக்கியமாவதே மனத்தின் அனுபவம்.
அறிவுக்குத் தத்துவமுண்டு.
அவையும் ஐக்கியத்தால் பெறுபவையே.
மனம் பெறும் ஐக்கியத்தின் பிரதிபலிப்பே அவை.
வேதாந்தம் அவற்றைப் பொருட்படுத்தவில்லை.
நாம் மனத்தைக் கடக்க வேண்டும்.
அறிவையும் கடக்க வேண்டும்.
அறிவு நம்முள் ஆழ்ந்து செயல்படுகிறது.
விழிப்பில் அது தெளிவாகவுள்ளது.
நம் பரிணாமம் மேல் நோக்கியது.
ஆழ்நிலை ஆண்டவனிலிருந்து நாம் அங்கு வருகிறோம்.
பரிணாமம் நம்மை மேல் நோக்கித் தள்ளுகிறது.
பரம்பொருள் என்பது எல்லாம். அது மேலிருக்கிறது.
பரம்பொருள் தனக்கு உருவம் தருகின்றது.
அவை இரண்டையும் இணைக்க முயல்கிறது.

It does so in many ways.
Two of those formulations are there.
They are up above and down below.
The same ALL is up there and down below.
Each has a master word.
Life is of the subconscient.
Light is of the superconscient.
These are the two master words.
Action is the essence of Life.
Knowledge is consciousness.
It is involved in Life.
In the superconscient too there is action.
Action enters into Light.
Action is not involved here.
There is supreme consciousness here.
Knowledge is involved in it.
Intuition is common between them.
Identity must be conscious.
Conscious identity is intuition.
Identity is between the knower and the known.
Knowledge makes them one.
It is a state of common self-existence.
Intuition is in the action below.
Knowledge is concealed.
Knowledge is conscious identity.

அதைப் பலவாறு சாதிக்கிறது.
இரு சூத்திரங்களுண்டு.
மேலும், கீழுமாக அவ்வுருவங்கள் அமைந்துள்ளன.
மேலேயுள்ள பரம்பொருளே கீழேயும் உள்ளது.
ஒவ்வொன்றுக்குரிய மந்திரம் உண்டு.
கீழுள்ளதற்குரிய சொல் வாழ்வு.
மேலுள்ளதற்குரியது ஜோதி.
இவ்விரண்டும் மந்திரம் போன்ற சொற்கள்.
செயல் வாழ்வு மையம்.
ஞானம் என்பது ஜீவியத்திற்குரியது.
அது வாழ்வில் மறைந்துள்ளது.
மேலும் செயல் உண்டு.
செயல் ஒளியை ஊடுருவுகிறது.
செயல் இங்கு மறைந்தில்லை.
இங்குப் பரம்பொருளின் ஜீவியமுண்டு.
ஞானம் இதனுள் உறைகிறது.
இவையிரண்டிற்கும் பொதுவானது நேரடி ஞானம்.
ஐக்கியம் என்பதை நாம் அறிந்து பெறுகிறோம்.
நேரடி ஞானம் நாம் தெரிந்து பெறும் ஐக்கியம்.
மனிதனுக்கும் பொருளுக்குமிடையே ஐக்கியம் உண்டு.
ஞானம் அவற்றை இணைக்கிறது.
இரண்டிற்கும் பொதுவான வாழ்வு அது.
நேரடி ஞானம் கீழே செயலில் உண்டு.
ஞானம் மறைந்துள்ளது.
தெரிந்த ஐக்கியம் ஞானமாகும்.

Knowledge is concealed in action.
Intuition masks itself in life.
It is not necessary for it to hide in the superconscient.
Light is the law in the superconscient.
It is also its principle.
Intuition is conscious identity.
It is also effectivity of action.
In the superconscient it is the accompaniment.
Rather, intuition is the necessary consequent.
Therefore it need not hide here.
It is the primary fact here.
The true nature of intuition is light.
Therefore it is knowledge.
It naturally emerges out of light.
Reason and mind act between life and superconscient.
They are the intermediaries here.
Knowledge is imprisoned.
Reason and mind liberate knowledge.
Knowledge resumes its original importance.
Self-awareness is in the mind.
We have a content and continent.
It can apply to both of them.
It can also apply to own-self.
It is applied to other-self.
Self awareness, thus, exalts itself.

ஞானம் செயலில் மறைந்துள்ளது.
வாழ்வில் நேரடி ஞானம் திரைமறைவிலிருக்கிறது.
மேலே பரம்பொருளில் மறைய வேண்டிய அவசியம் அதற்கில்லை.
அங்கு ஜோதியே சட்டம்.
முதன்மையான சட்டமும் அதுவே.
நேரடி ஞானம் தெரிந்த ஐக்கியம்.
செயலைப் பூர்த்தி செய்வதும் அதுவே.
பரம்பொருளில் நேரடி ஞானம் உடன் வருவதாகும்.
அங்கு நேரடி ஞானம் இயல்பாக வருகிறது.
எனவே மறைய அவசியமில்லை.
அங்கு அதுவே முதல்.
நேரடி ஞானத்தின் இயல்பு ஜோதி.
எனவே அது ஞானமாகும்.
எனவே ஞானம் இயல்பாக ஜோதியினின்று எழும்.
வாழ்வுக்கும் பரம்பொருளுக்குமிடையில் அறிவும் மனமும் உள்ளன.
அவை இடைப்பட்டவை.
ஞானம் சிறைப்பட்டுள்ளது.
அறிவும் மனமும் ஞானத்திற்கு விடுதலை அளிக்கின்றன.
ஞானம் தன் பழைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது.
மனம் தன்னை அறியும்.
பாத்திரமும், அதன் பொருளுமுண்டு.
அறிவு இரண்டிற்கும் பொருந்தும்.
அறிவு தனக்கு வேண்டும்.
புறத்தையும் அறிய வேண்டும்.
தன்னை அறிவது அங்ஙனம் உயர்கிறது.

It becomes luminous.
It seeks identity.
It is self-manifest identity.
Then reason changes.
It becomes self-luminous.
It becomes intuitional knowledge.
This is the highest knowledge.
Now mind fulfils itself in the supramental.

Page No : 65
Para No : 10

The above is a human understanding.
It is a scheme of knowledge.
Vedanta is based on this conclusion.
The ancient sages arrived at some results.
It is on the above foundation.
Sri Aurobindo is not going to develop this idea.
He passes this by briefly.
He reviews some of their conclusions.
He is concerned with divine life.
Vedanta touches divine life.
He would review only those ideas.
The Infinite is changeless.
It is ever changing.
We shall deal with it anew.
We aim at largest gains.

அது ஜோதியாகிறது.
அது ஐக்கியத்தை நாடுகிறது.
சுயவெளிப்பாட்டின் ஐக்கியம் அது.
அறிவு அப்படி மாறுகிறது.
அதுவும் ஜோதிமயமாகிறது.
அது நேரடி ஞானமாகிறது.
இதுவே உச்சகட்டம்.
மனம் இதுபோல் சத்தியஜீவியத்தில் பூர்த்தியாகிறது.

மேற்சொன்னது மனித அறிவு.
அது ஒரு திட்டம்.
வேதாந்தத்தின் அடிப்படை இதுவே.
ரிஷிகள் வந்த முடிவு இது.
மேற்சொன்ன அடிப்படையில் எடுத்த முடிவு இது.
இதைத்தொடர பகவான் விரும்பவில்லை.
இதை லேசாக விமர்சிக்கின்றார்.
இம்முடிவுகளை எடுத்துக் கூறுகிறார்.
தெய்வீகவாழ்வு இவருடைய இலட்சியம்.
வேதாந்தம் தெய்வீகவாழ்வைப் பற்றிப் பேசுகிறது.
அதைமட்டும் விளக்குவதே பகவான் நோக்கம்.
அனந்தம் நிலையானது.
நிலையான அனந்தம் நிலையற்றது.
நாம் அதை விமர்சிப்போம்.
பெரும்பலனை நாம் நாடுகிறோம்.

We intend accumulating them.
The old treasure is our initial capital.
In Vedanta we shall find the best of ideas.
They are the previous foundation.
We need to rebuild it.
Knowledge changes with the times.
The old expression is changed.
New expressions are used.
Old light is given up.
New light is introduced.
Fresh dawns bring fresh light.
This suits the new mentality.
Still, we need the old.

Cond..

ஸ்ரீ அரவிந்த சுடர்

நாலுபேர் எதிரில், மனிதன் முறையற்று நடந்து கொள்வதில்லை. மனச்சாட்சிக்கு உட்பட்டவன், எண்ணத்தால் ஊறு செய்வதில்லை. யோகி தன் ஆழ்ந்த மனத்திலிருந்து தீமையையும், தவற்றையும் அகற்ற வேண்டும்.

அவற்றைச் சேகரிப்பது நம் குறிக்கோள்.
பழைய பொக்கிஷம் நமது இன்றைய முதல்.
வேதாந்தத்தில் உயர்ந்த எண்ணங்களுண்டு.
அதுவே பழைய அடிப்படை.
நாம் அதைப் புதுப்பிக்க வேண்டும்.
ஞானம் காலத்தால் மாறும்.
பழைய சொற்கள் மாறுகின்றன.
புதுப் பிரயோகம் எழுகிறது.
பழைய பிரகாசம் போகிறது.
புதிய ஒளி வருகிறது.
புதிய விடியல் புது ஒளி வெள்ளத்தைத் தருகிறது.
இன்றைய மனப்போக்குக்கு இது சரி.
இருப்பினும், நமக்கு பழைய ஞானம் தேவை.

தொடரும்...

ஸ்ரீ அரவிந்த சுடர்

ஞானம் என்பதைப் பல வகைகளாகப் பிரிக்கலாம்.
அறிவு பெறும் ஞானம்,
உணர்வு பெறும் ஞானம்,
ஜடம் பெறும் ஞானம்,
ஆத்ம ஞானம்.
இவை அனைத்தும் ஜீவனின் பகுதிகள். ஆதலால் இவை ஜீவன் பெறும் ஞானத்தின் பகுதிகள். ஜீவன் பரம்பொருளோடு ஐக்கியமாகும்பொழுது ஞானம் பெறுகிறது.

"சிறு குறிப்புகள்’’

அஜெண்டா 4ஆம் வால்யூமில் 56ஆம் பக்கத்தில் அன்னை தாம் படித்ததைப் பற்றிச் சொல்லுகிறார். 5 மாதம் தொடர்ந்து படித்தார். “ஒரு 800 புத்தகங்கள் படித்தேன்..........., இல்லை, அந்த ஐந்து மாதங்களில் சுமார் தொள்ளாயிரத்து ஐம்பது புத்தகங்கள் படித்தேன்” என்றார்.

M.A. படித்து ஆங்கில ஆசிரியராகப் பல்கலைக் கழகத்திலிருப் பவரிடம், மனைவியார் தம் தோழி எழுதிய கார்டைப் படிக்கும்படிக் கொடுத்தார். “உனக்குத் தெரியுமல்லவா, எனக்குப் படிப்பது கஷ்டம் என்று, என்ன விஷயம் சொல்லேன்” என்றார். தோழி தம்மை உயர்வாக எழுதியிருப்பதைக் கணவர் படிக்க வேண்டும் என நினைத்தவர் பெற்ற பதில். இவர் பல்கலைக்கழகத்தில் சிறந்த ஆசிரியர் எனப் பெயர் வாங்கியதால் இவருக்குப் பல இடங்களிலி ருந்து அழைப்பு வருகிறது.

தம் 2 வயதுக் குழந்தைக்கு அமெரிக்க முறைப்படி பாடம் போதித்தவர், அப்பெண் குழந்தை 5ஆம் வயதில் **Readers Digest** முழுவதையும் படிப்பதைக் கண்டார். 11ஆம் வயதில் அக்குழந்தை ஒரே நாளில் 700 பக்க ஆங்கில நாவலை படித்து முடித்தது. மேலும் பல உதாரணங்களை இருதரத்திற்கும் கூறலாம். படிப்பைப் பற்றிய உண்மைகள் பல.

1) பயிற்சியும், பழக்கமுமில்லாதவர்க்குப் படிப்பது கடினம். 50 பக்கம் படிக்க 1 வாரமாகும்.

2) முழு ஆர்வமுள்ளவர்க்கு நல்ல பயிற்சியைச் சிறு வயதில் தொடர்ந்து கொடுத்தால் எளிய நூல்களை ஒரு நாளில் 800, 900 பக்கமும் படிப்பவர்கள் உண்டு.

3) அப்படிப்பட்டவர் ஒரு மணி நேரத்தில் 100 பக்கத்திற்கும் அதிகமாகப் படிப்பார்கள்.

4) ஆன்மீக விழிப்புள்ளவர் - விவேகாநந்தருடைய அனுபவம் - புத்தகத்தை எடுத்து முதல் பக்கம் படித்தால், முழுப் புத்தகமும் மனதுள் பாய்வதைக் காணலாம்.

5) அன்னைக்கு ஆன்மீக விழிப்பும், சூட்சுமத்திறனும், படிக்கும் பழக்கமும் அதிக அளவிலுண்டு.

5 மாதத்தில் 950 புத்தகம் எனில் 1 நாளில் அன்னை 6 புத்தகங்கள் படித்தார். பகவான் ஸ்ரீ அரவிந்தரை முதலில் சந்தித்த பொழுது அவர் மௌனம் பெற்றார். மௌனம் தம் தலையுள் நுழைந்தவுடன் “நான் ஒரு நூலகம். நான் படிக்காத புத்தகம் இல்லை. அவை கொடுத்த அறிவின் அமைப்புகள் எல்லாம் என் மனதினுள் கரைவதைக் கண்டேன். ஏதோ அற்புதம் நடக்கிறது என உணர்ந்தேன். **Let this last.** இது நீடிக்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்தேன். என் ஆயுள் முழுவதும் அந்த மௌனம் என்னை விட்டகலவில்லை” என்று கூறியுள்ளார். வாழ்நாளில் ஒருவர் 950 புத்தகம் படிப்பது அரிது. அன்னை அதை 5 மாதத்தில் முடித்தார்.

❋ ❋ ❋

ஸ்ரீ அரவிந்த சுடர்

சமுதாயம் சட்டத்திற்குட்பட்டது. மனித சுபாவத்தால் கட்டுப்பட்டது என்பதை அறிவுடைய ஒருவன் புரிந்து கொள்ளலாம். தெளிவில்லாதவன் கண்ணில் இது படுவதில்லை.

"அன்பர் கடிதம்"

கடந்த *1998*-ஆம் வருடம் பாண்டிச்சேரி சென்று வந்த உறவினர் ஒருவர் அன்னை பெருமையை என் மாமியாருக்குச் சொல்ல அவரும் ஒரு படம் வாங்கி வைத்து, தினமும் வணங்கி வந்தார். கூட்டுக் குடும்பத்திலுள்ள எங்களுக்கு அந்த வணங்குதல் என்ற விஷயம் மட்டுமே அறிந்திருந்த நேரத்தில் எனக்கு ஒரு மனக்கஷ்டம் வந்தது. தெளிவான முடிவு எடுக்க இயலாத நிலைமையில் என்ன தோன்றியதோ தெரியவில்லை, ஸ்ரீ அன்னை படத்திற்கு முன் நின்று 'நீதான் நல்லதொரு பதிலைக் கூறவேண்டும்' எனப் பிரார்த்தனை செய்துவிட்டு என் வேலையைத் தொடர்ந்தேன். முடிவு தானாகவே அமைந்தது. ஒரு வாரம் கழித்து ஸ்ரீ அரவிந்தரின் படம் **(Aug 15th)** மற்றும் **blessing packet**-உம் வேறொருவர் பெயரில் என்னுடைய அட்ரஸ் போட்டு வந்தது. பாண்டிச்சேரி என்று போட்டிருந்ததால் பெயர் மாறியிருந்தது கூடத் தெரியாமல் பிரித்து விட்டேன். புளகாங்கிதம் அடைந்தேன். ஆனால், பெயர் யாருடையதோ என்பதால் குற்றவுணர்ச்சி மேலிட ஊர் முழுவதும் இதே மாதிரி தெருவில் *(2* தெரு உண்டு*)* **postman**-ஐ விட்டே தேடச் சொல்லியதில் அப்படி யாருமே இல்லை என்று அறிய வந்ததில் சொல்லவொணா மகிழ்ச்சி அடைந்தேன். இருப்பினும் தொடர்ந்து இருமாதங்களுக்கு அன்னையிடம் தொடர்பில்லை.

மூன்றாவது மாதம், எங்கள் ஓர்ப்படிக்கு மூன்றுவிதமான ப்ராப்ளம் உடம்பில் எழ அதாவது **uterus remove** செய்தாகிவிட்டது. அதைப் பிரித்துத் தைக்கையில் **mesh** வைத்து தைக்காததால் தையல் பிரிந்துவிட்டது. அதேசமயம் கால் ப்ளேடரில் **gall bladder** கற்கள் ஃபார்ம் ஆகியிருந்தது தெரியவந்தது. முழுவதுமாகக் கிழித்தால் உடம்பு தேறாது. தையலைக் கிழித்துத் தைத்துவிட்டு **stones**-ஐ லேப்பிராஸ்கோப்பிமூலம் எடுக்கவேண்டும். கையில் 1½ வயது குழந்தை வேறு. இதை சக்ஸஸ்புல்லாகச் செய்ய எந்த டாக்டர் இருக்கிறார் என்ற ஆராய்ச்சியில் கோயம்புத்தூரில் மருத்துவர் கிடைத்து ஆப்பரேஷனுக்கு சென்று விட்டனர். இங்கேயே இருந்து நாங்கள் அன்னைக்கு வழிபாடு செய்ய செய்ய ஸ்ரீ அன்னை குன்னத் தூரிலிருந்து என் மைத்துனரின் கனவில் வந்து அவர் கையைப் பிடித்து மேல்மாடிக்கு அழைத்துச் செல்வதாகப் போனில் சொல்ல அதுவே நல்ல முடிவைத் தெரிவித்தது. ஆபரேஷன் நல்லபடியாய் முடிந்து எந்தவிதமான பிரச்சினையுமின்றிச் சுகமாக இருக்கிறார். எல்லாம் அன்னையின் அருளே.

அடுத்து என் நாத்தனார் கணவர் சென்ற வருடம் மூளையில் கட்டி ஏற்பட்டு **(brain tumour)** அப்பல்லோவில் அனுமதிக்கப்பட்டார். சென்னையிலிருந்த அன்னைஅன்பர்கள் என் நாத்தனாருக்காகப் பிரார்த்தனை செய்ததில் அவரும் அன்னை **devotee** ஆனதுடன் மாதாமாதம் போபாலிலிருந்து அன்னைக்குக் காணிக்கை அனுப்பி வருகிறார். இதற்கிடையில் **Nov ''99** இல் அவருக்கு கொடுத்து வந்த கீமோதெரபியின் மூலம் எரித்தவை *(*கட்டியை எரிக்க பயன்படும் கதிர்கள்*)* பண்டலாக மூளையின் நரம்பில் உட்கார அதனால் அவருடைய செயல்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டு, தூக்கம், தூக்கம், தூக்கம்தான். ஒருசமயம் அவர் உயிரே பிழைக்கமாட்டார் என்று கைவிட்ட நிலையில் அன்னையே நம்பிக்கை அளித்துவருகிறார். வேண்டிவேண்டி ஹீமோகுளோபின் மிகவும் குறைந்த நிலையில் தற்போது முன்னேற்றம் அடைந்ததுடன் நன்கு தேறி வருகிறார். இதற்கிடையில் *24*ஆம் தேதி *(*பிப்ரவரி*)* ஊருக்கு டிக்கட் வாங்கி உள்ளோம். ஆனால், அவருடைய **health** மிகவும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று அன்னையின் பிறந்த நாளில் யாரோ தெரிந்தவர் இந்தப் பூவை எடுத்துப்போங்கள் வீட்டுக்கு என்று என் மைத்துனரிடம் கொடுத்தனுப்ப நாங்களும் பிரமாதமாக அன்னையின் அருளால் மலரஞ்சலி செலுத்தினோம். இதில் விசேஷம் என்ன என்கிறீர்களா? எங்கள் வீட்டில் பூக்கும் செம்பருத்தி, மயில் கொன்றை, கொழுக்கட்டை மந்தாரை, சங்கு புஷ்பம், பவளமல்லி, நந்தியாவட்டை, பன்னீர்ப் பூக்களை எம்போதும் தினமும் செய்வதுபோல தட்டுக்களில் அடுக்கி வைத்திருந்தேன், கூடவே கொஞ்சம் காகிதப்பூ. ஆனால்

மலர்க்கோலமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணமே இதுவரை எழவில்லை, செய்யவுமில்லை. முதல்நாள் (20ஆம் தேதி) தரிசன நாளில் பாண்டிக்குச் செல்லமுடியவில்லையே என்ற வருத்தத்தோடு படுத்ததுடன் சரி, ஆனால் அன்னை ஒரு பை நிறைய பூக்களைக் கொடுத்தனுப்பி தனக்கு தானே செய்து கொண்டார். அதுவும் அதிலிருந்த பூக்கள் முற்றிலும் எங்கள் வீட்டில் இல்லாதன செவ்வரளி, வெள்ளை அரளி, ஜவந்தி, சம்பங்கி, வாடாமல்லி, பெயர் தெரியாத அழகான பூ (மெரூன் நிறத்தில்) மற்றும் வீட்டில் இருந்த விருட்சி மலர். அன்னையின் கருணையே கருணை!எங்கள் இரண்டரை வயதாகும் குழந்தைகளும் ஏதாவதொன்று என்றால் அன்னையிடமே பேசுகின்றன.

மலரலங்காரம் 3 மணிக்குச் செய்தோம். ஐந்தேமுக்காலுக்கு ஒரு **van** நிறைய உறவினர்கள் வந்தனர். வந்தவர்கள் மெய் சிலிர்த்து நின்றனர். காரணம் அவர்கள் அன்னை அன்பர்கள். தினமும் மாலை 6 மணிக்குப் பிரார்த்தனை செய்யும் வழக்கமுடையவர்கள். ஊர் போய் சேர்ந்து பிரார்த்தனை செய்ய முடியாதே என்று கவலைப்பட்டவாறே வந்துள்ளனர். ஆனால், எல்லாம்வல்ல அன்னை எங்கள் வீட்டிலேயே பிரார்த்தனை செய்ய அவர்களைப் பணித்து விட்டார். எல்லோர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

இன்னோர் அற்புதமும் நடந்தது. எங்கள் உறவினர் பையன் இரயிலில் அடிபட்டு கோமாவில் 22 நாள் கிடக்கையில் இங்கிருந்தவாறே பிரார்த்தனை செய்து என்னிடமிருந்த போட்டோவை அனுப்பினேன். அவன் தலையணைக்கடியில் வைத்த 1 மணி நேரத்தில் நினைவு திரும்பி இன்று நல்லபடியாகிவிட்டான்.

அன்னையின் அருளுக்கு அளவேது? பொறுமையில்லாததுடன் எல்லாவித அவசர நடவடிக்கையுடனிருந்த என்னுடைய குணத்தையும் மாற்றிவருகிறார் அன்னை என்றால் மிகையில்லை.

❊ ❊ ❊

P. 4 And buried its seed of grandeur in the hours

அற்புதங்களின் வித்தை தாங்கிவரும் காலத்தின் பகுதிகள்.

தனித்திருந்து மனிதன் சிந்திக்கும்பொழுது எழுவது கற்பனை. இறைவனின் கற்பனை இயற்கையாக மாறியதைத் தத்துவம் காலம் என்கிறது. நான்கு அங்குல டிஸ்க்கில் 30,000 பக்க கலைக் களஞ்சியம் கம்ப்யூட்டரால் அச்சிடப்பட்டுள்ளது இன்றைய விஞ்ஞான சாதனை.

உலகத்தின் அற்புதங்களை இறைவன் காலத்துள் வைத்துள்ளான்

என்பது மேற்கூறிய வரியின் கருத்து. ஜோஸ்யரிடம் போனால் நம் பிறந்த நாளைக் கேட்கிறார். நேரத்தைக் கூறுகிறோம். அவர் கட்டம் போட்டு நாள், நட்சத்திரம், லக்னம், ராசி, திசை என ஆயிரம் விவரங்களை எழுதுகிறார். அவர் கணக்கு முடிந்தபின் நாம் கூறிய நாள், மணி இவ்விரண்டிலிருந்து நம்முடன் பிறந்தவர், பெற்றவர்கள், நாம் வாழ்க்கைப்பட்டவர், நமக்குப் பிறந்தவர், செய்த தொழில், இனி செய்யப் போகும் தொழில், இதுவரை வாழ்வில் நடந்தவை, இனி நடக்கப் போகும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறுகிறார். மேலும் அவரால் போன ஜென்மத்தையும், அடுத்த ஜென்மத்தையும் சொல்லமுடியும்.

நாம் கூறிய சிறு விவரங்களினின்று அவர் நம் உலகையே அறிந்து பேசமுடிகிறது என்றால் அந்த நேரம் என்ற ஒரு விஷயத்தில் வாழ்வு என்ற கடல் மறைந்துள்ளது. இந்த நேரம் நாம் பிறந்த நேரம்.

காலத்தின் நாழிகை இறைவன் பிறக்கும் நேரமாகும்.

ஜோஸ்யர் நம் வாழ்வை அறிவார். ரிஷி நேரத்தில் இறைவன் ஜாதகத்தைக் காண்கிறார். அதுவே மேலே எழுதப்பட்ட காவியத்தின்

வரியாகும். இதையொட்டி எழுந்த சித்திரங்களை பகவான் ஸ்ரீ அரவிந்தர் பலவகைகளாக எழுதுகிறார்.

* வானமெனும் திரையில் வண்ணமெனும் எழுதுகோல் எழுதிய சூத்திரம்.
* மறை பொருளான இலட்சியத்தின் சிறு குறிப்பான அற்புதம்.
* அனந்தனின் மையத்தில் தெரியும் ஆனந்தத்தின் வதனம்.
* தூரத்து இன்பத்தின் தூய உருவம்
* காலத்தைக் கடந்த உலகிலிருந்து வரும் காலத்தின் தூதன்
* நட்சத்திரங்களின் நடுநிலை வழுவாத கதி
* இயற்கையின் காதில் ஒலிக்கும் அவள் அடிச்சுவடுகளின் ஒலி
* புவியின் மோனம் பூத்தெழுந்த புனிதம்
* மனத்தின் எண்ணம் தெய்வவரமாகும் யோக சமர்ப்பணம்.

❋ ❋ ❋

ஸ்ரீ அரவிந்த சுடர்

கொள்ளை, போர் மூலம் நாகரீகம் எழுதுகிறது.

ஸ்ரீ அரவிந்த சுடர்

நெருங்கிய நண்பனுக்கும், விரோதிக்கும் ஒரே குணம் இருப்பதுண்டு. நம்மைப் பொருத்தவரை அவர்கள் போக்கு எதிரானது.

அன்னையின் ஜென்ம தினம்

(21.02.2000 அன்று சென்னை-மாம்பலம் தியான மையத்தில் திருமதி. விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)

அன்னை உலகில் அவதரித்தபொழுது, அன்னை ஜீவியம் உலகில் அவதரித்தது. எல்லா ஜீவராசிகளும் அடுத்த உயர்நிலையில் பிறந்தது அன்னை ஜீவியம் பிறந்ததாகும். **Adult suffrage** நாட்டில் ஓட்டுரிமை வந்தது எனில் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு புது உரிமை வந்துள்ளதுபோல், அன்னையின் அவதாரம் செயல்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டு அன்னை ஜென்ம தினத்தன்று அனைத்து ஜீவராசிகளும் அடுத்த உயர்ந்த நிலையில் ஜனிக்கின்றனர்.

எந்தச் செயலுக்கும் இரு முனைகளுண்டு. **T.V.** எனில் மிகச் சிறியதிலிருந்து மிகப் பெரியதுவரை உள்ளது. நாம் இந்த நாளில் குறைந்தபட்சப் பலனையாவது, அதிகபட்சப் பலனையாவது பெறலாம். எந்த நிலைக்குரிய பலனைப் பெறுகிறோம் என்பது நாம் நிர்ணயிக்க வேண்டும். எத்தனைவிதமான பலன்கள் எந்தெந்த நிலைகளில் உள்ளன எனத் தெரிவது உதவும். எல்லோரும் எல்லா நிலைகளையும் எட்ட முடியும் என்றாலும், நடைமுறையில் நாம் நமக்கு ஒரு வரை யறையை ஏற்படுத்துகிறோம்.

ரூ. 8000 சம்பாதிக்கும் ஊழியர், அவர் குடும்பத்தை நிர்வாகம் செய்யும் மனைவி, 1000ரூபாய் சம்பாதிக்கும் சிறு வேலை செய்பவர், 8 கோடி முதலுக்கு அதிகாரி, பூக்கடையில் ரூ. 25,000 சம்பாதிப்பவர், பெரு முதலாளி என பல வகையினர் உண்டு. உச்சகட்டத்தில் சத்திய ஜீவியமும், குறைந்தபட்சம் பிரார்த்தனை பலிப்பதாகவும் கொண்டால், குறைந்தபட்ச நிலையிலுள்ளவர்க்கு ''சத்தியஜீவியம்'' பலிப்பது என்றால் என்ன? அது சாத்தியமா? வறுமையான ஆசாரமானவர் வீட்டில் வரன் என வாராதபொழுது வயதுவந்த இரு பெண்களுக்கு பிரார்த்தனையால் வரன் வருகிறது. தூயமனமுடையவர், பரந்த தியாக உள்ளம் சத்திய ஜீவியத்தை எட்டுகிறது. வரன் முடிகிறது. செலவை

பிள்ளை வீட்டார் ஏற்கின்றனர். இரு பெண்கட்கும் திருமணம். பையனுக்கு உபநயனம். வரன் பிரார்த்தனைக்கும், சத்திய ஜீவியம் முறைக்கும் பலித்தது. தூய்மைக்குரிய பரிசு. சட்டங்கள் எவை:-

1) பிரார்த்தனை பலிக்கும்.
2) மனத்தின் உயர்வுக்கேற்ப அன்னையின் உயர்வு செயல்படும்.
3) பலன் நம் நிலைமைக்கும், முறை நம் தூய்மைக்குமாகவும் அமையும்.
4) உச்சகட்ட பலனும், உச்சகட்ட உயர்வும் சேரலாம் எனினும், நடைமுறையில் காண்பதில்லை. இருக்கக்கூடாது என்பது சட்டமில்லை.

மேற்சொன்ன எந்த வகைப் பலனும் அன்னை ஜென்ம தினத்தில் அதன் சிறப்புக்கேற்ப பலிக்கும். ரூ.8000 சம்பாதிக்கும் ஊழியருக்கு 10,000 ரூபாய் சம்பளம் பிரார்த்தனையானால் ஜென்மதினத்தில் அது 20,000 ரூபாயாகவோ, மிகப் பெரிய கம்பெனியில் ரூ. 10,000 மாகவோ பலிக்கும். 20,000 ரூபாய் சம்பளம், மிகப்பெரிய கம்பனியில் கிடைப்பது பலனும், உயர்வும் உச்சகட்டத்தில் சேருவதாகும். எந்தப் பிரார்த்தனையும் பலிக்கும். ஜென்மதினத்தில் அதிகமாகப் பலிக்கும்.

அன்னை ஜென்மதினத்தன்று அன்பர்கள் அதிர்ஷ்டம், அருள், பேரருள் பெறலாம். அதிர்ஷ்டத்தை மட்டும் விவரிக்கிறேன். மனத்திண்மை, உயர்வுக்கேற்ப அருள் செயல்படும். அதிர்ஷ்டம் என்பதை எத்தனை வகைகளாக அறிவோம் என்று நாம் அறிவோம்.

ரூ.8000 சம்பாதிப்பவர் அதிர்ஷ்டம் என 8 லட்சரூபாய் அல்லது 80 லட்சத்தைக் கருதலாம். பேராசையின்றி அவர் திறமைக்கு, நிலைமைக்கு எது அதிர்ஷ்டம் என அவர் முடிவு செய்கிறாரோ அதுவே அவருக்கு அதிர்ஷ்டத்திற்குரிய தொகையாகும். அதிர்ஷ்டம் என்பது பெரிய கொள்கை. நாம் நம் வாழ்வில் அதிர்ஷ்டத்தை உற்பத்தி செய்ய முடியும் என்பது இதுவரை உலகம் கேள்விப்படாதது. எது பெரிய தொகை என நாம் மனதால் கருதுகிறோமோ அதைப் பெறுவது அதிர்ஷ்டம் எனக் கொள்வோம். பிரச்சினை தீர்வது,

முக்கியக் காரியம் கூடிவருவது, வாய்ப்பு பலிப்பதும் அதிர்ஷ்டமானாலும், தொகையையே உதாரணமாக எடுத்துக்கொள்கிறேன். இங்கு கூறும் முறையால் இத்தொகை ஒருவருக்குப் பலித்துவிட்டால், அம்முறையை அவர் தெளிவாகக் கண்டால், அதே முறை அதிர்ஷ்டத்தை நிரந்தரமாக்கவும், அருள், பேரருள் பெறவும் உதவும். முறை:-

1) தொகையை நிர்ணயிப்பது.
2) காலத்தைக் குறிப்பிடுவது.
3) நம் மனநிலையை அறிவது.
4) அன்னையின் பல நிலைகளை அறிவது.
5) அழைப்பு, பிரார்த்தனை, சமர்ப்பணம்.
6) பூர்த்தியாகும் நிபந்தனை.
7) பூர்த்தியாகச் சுருக்கமான வழி.
8) அடிப்படை நிபந்தனை.

1) தொகை: நம் வாழ்வு நிலை, சமூகநிலைக்கும் நம் மனம் பலிக்கும் என நம்பும் தொகை நம் அதிர்ஷ்டத்திற்குரிய தொகையாகும். அதை நாமே நிர்ணயம் செய்யவேண்டும். அதிர்ஷ்டம் என்பது பெரியதன்றோ? நாம் நிர்ணயிப்பது சிறியதாயிற்றே. அது எப்படி அதிர்ஷ்டமாகும் எனக் கேள்வி எழுப்பலாம். கற்பனை, கற்பனைக் கோட்டையாக இல்லாமல், தொகை ஆசையாலன்றி அறிவால் நிர்ணயிக்கப்பட்டால், அது அதிர்ஷ்டத்திற்குரியதாயில்லை எனப் பட்டால், அதிர்ஷ்டத்திற் குரிய தொகையாக மாற்றப்பட வேண்டும். உதாரணமாக 8000ரூபாய் சம்பாதிப்பவர் 8 லட்ச ரூபாயையும், 8 கோடி முதலாளி 80 கோடி ரூபாயையும் அவ்வாறு நிர்ணயம் செய்வதாகக் கொள்வோம்.

2) காலம் நிர்ணயிக்கப்படுவதற்கும் நிபந்தனை மேற்சொன்னதே யாகும். ஆசை அவசரமின்றி, அர்த்தமற்றதாக இல்லாமல் காலம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அது தொழிலின் சீசனாக இருக்கலாம்.

நம் நிலையையொட்டிய நேரமாகவுமிருக்கலாம்.

3) மனநிலை - மீண்டும் முன்சொன்னவையே நிபந்தனைகள். அதிர்ஷ்டம் எவருக்கு வந்தாலும் நமக்குச் சந்தோஷம் வருவது பலிக்கும் மனநிலை.

4) அன்னையின் பல நிலைகள். உடல், உணர்வு, மனம், ஆன்மா, சத்தியஜீவியம் ஆகிய நிலைகளில் அன்னை இருக்கிறார். எந்த நிலையிலிருந்து அன்னை பலிக்கின்றாரோ அதற்குரிய பலன் வரும்.

5) அழைப்பு, பிரார்த்தனை, சமர்ப்பணம் ஆகியவற்றுள் ஒரு முறையை நாம் கைக்கொள்ள முடிவு செய்ய வேண்டும்.

6) அகச்சூழல், புறச்சூழல் கூடிவரும் அறிகுறிகளைக் காட்டவேண்டும்.

7) சுருக்கமான வழி, நமக்கு அதிர்ஷ்டம் வருமுன் அடுத்தவர் ஒருவருக்கு வர மனம் விழைவது.

8) மனம் தூய்மையாக இருக்கவேண்டும். குறையுள்ள மனம் விலக்கு.

மேற்சொன்னவை குறைவர இருந்தால், அதிர்ஷ்டம் பெறும் முடிவை எடுக்க வேண்டும். முடிவு சலனமற்றதாக இருப்பதுடன், நாளுக்கு நாள் வளர்வதாக இருக்கவேண்டும். முடிவு முழுமையானதானால், மனம் முடிவை ஏற்கும். ஏற்றபின் முடிவு நழுவாது. மனம் முழுமையாக முடிவை ஏற்றதற்கு மற்றோர் அடையாளம் அமைதி எழுந்து வளர்வதாகும், இனி இம்முடிவு மனதில் எண்ணமாக எழும்தொறும், ஒரு முறை தவறாமல் சமர்ப்பணம் செய்ய அடுத்த முடிவு தேவை.

என்று ஒருமுறை தவறாமல் சமர்ப்பணம் பலிக்கிறதோ அன்று அத்தொகை நம்மை வந்து அடையும்.

மீண்டும் ஒரு முறை சில நிபந்தனைக்குரிய விவரங்களைக் கூறுவது உதவும்.

* சந்தேகம் என்று எழக்கூடாது. எழுந்தால் மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

* தூய்மை என்பது The Mother என்ற நூலில் rejection என பகவான் சுமார் 30 குறைகளைக் கூறுகிறார். அவை அனைத்தும் விலகுவது யோகம் பலிப்பதாகும். இந்த அதிர்ஷ்ட முயற்சியைப் பொருத்தவரை அவற்றுள் எதுவும் உள்ளே தலைகாட்டக்கூடாது.
* Mother, Mother என்று பேப்பரில் ராமஜெயம் போல் எழுதுவது உடலுக்குரிய முறை. வாயால் Mother என்பது vital உணர்வுக்குரிய முறை. மனத்தால் Mother என்பது மனத்திற்குரியது. மௌனமாகி தானே Mother என்ற சொல் உள்ளே எழுவது ஆன்மாவுக்குரிய முறை. அதிர்ஷ்டத்தை நாடும் மனம் தானே அதை மறந்து அன்னையை நாடுவது சத்திய ஜீவியத்திற்குரிய முறை. சமர்ப்பணமும் சத்திய ஜீவிய முறையாகும்.
* நாம் எந்த முறையைக் கையாள்கிறோமோ அந்நிலைக்குரிய முறை அந்நிலைக்குரிய அன்னையைச் செயல்பட வைக்கும்.
* எனக்கு ஒரு கண் போனாலும் அடுத்தவனுக்கு 2 கண் போக வேண்டும் என்பது மனிதமனம். எனக்கு வருமுன் அதிர்ஷ்டம் அடுத்தவர்க்கு வரவேண்டும் என்ற மனநிலை அன்னைக்குரிய மனநிலை. அது ஒருவராக இருக்கலாம், பலராக இருக்கலாம், நெருங்கியவராக இருக்கலாம், தூரத்தினுள் உள்ளவராகவும் இருக்கலாம். அது நம்மைப் பொருத்தது.
* சூழல் - மனம், புறம் - நம் மனநிலையைப் பிரதிபலிக்கும். அது சுட்டிக் காட்டுவதை மனம் ஏற்று அதற்கேற்ப மாற முன்வருதல் அவசியம்.

அகமும் புறமும் அழகாக அமைதியாக இருப்பது தூய்மைக்குரிய லட்சணம்.

* அருளை நாடினால், அதிர்ஷ்டம் அதற்குட்பட்டது தானே வரும்.
* அன்பை வெளிப்படுத்தினால் அருள் நம்முள் வரும்.
* அன்பு (divine love) என்பது அழகான பழக்கம் மட்டுமன்று, நல்ல சொல் மட்டுமன்று, நம்மைப்போல் பிறரைக் கருதுவது மட்டுமன்று. நம்மை மீறி எழுவது, அனைவரையும், அனைத்தையும் நாடுவது, பலன் எதிர்பாராதது, கொடுக்காமலிருக்க முடியாது என்பது.

❋ ❋ ❋

Vol III, P.96 In the subtle physical you see in a man qualities that you miss

நம் அறிவுக்குப் புலப்படாத குணங்கள் ஒருவருடைய சூட்சும உடலில் வெளிப்படும்

Aura என்று ஆங்கிலத்தில் கூறுவதை நாம் ஒருவரைச் சுற்றியுள்ள சூழல் என்று குறிக்கலாம். ஓர் அமெரிக்கப் பெண்ணுக்குப் பிறருடைய "சூழலை"க் காணும் சூட்சுமத்திறன் உண்டு. சுமார் 20, 30 வருஷத்திற்கு முன் அவர் ஆசிரமம் வந்த பொழுது சாதகர்கள், பக்தர்களைச் சுற்றியுள்ள ஒளியைப் பார்த்து வியந்தார். ஒரு சிலரைச் சுற்றி தங்க நிறமும், பலரை வெண்மையான ஒளியும் சூழ்ந்திருப் பதைக் கண்டார். தங்கமயமான ஒளி சத்திய ஜீவிய ஒளி. வெண்மை நிறமானது அன்னைக்குரியது.

அவருக்குச் சூட்சுமப்பார்வையிருந்ததால் இவற்றைக் காண முடிந்தது. அன்பர்கள் அன்னையை ஆழ்ந்து விரும்பும் நேரம் அவர் நெஞ்சில் பொன்னொளி எழும். முகத்தில் பிரகாசம் தெரியும். அவரே சில மணி நேரத்திற்குப்பின் எரிச்சல்பட்டால், அவ்வொளி விலகும், பொறாமைப்பட்டால், முகம் கருவடையும். கர்வமாக நினைத்தால் அவர் அகந்தை எழுந்து அவரைச் சூழ்ந்து கொள்ளும்.

நாம் யாரிடம் தைரியமாகப் பழகலாம், யாரை விலக்க வேண்டும் என்று அடிக்கடியும் பலர் கேட்கின்றனர். சூட்சுமப்பார்வையுள்ளவர்க்கு இக்கேள்வி எழாது. யாரைச் சுற்றி ஒளியுள்ளது, எவர் முகம் பேயறைந்தது போலிருக்கிறது என்பது அவருக்கு உடனே தெரியும். அப்பார்வையில்லாதவர்க்கு கீழ்க்கண்ட கருத்துகள் உதவும்.

தைரியமாக நாம் பழகக் கூடியவர்கள்	அடியோடு விலக்கப்பட வேண்டியவர்கள்
1) முகம் பிரகாசமாக உள்ளவர்	பேயறைந்த முகத்தினர்
2) நம்மிடம் கனிவாக, இதமாகப் பழகுபவர்கள்	மனம் புண்படும்படி நடப்பவர்கள்
3) எவரை நினைத்தால் மனம் இதமாக இருக்கிறதோ அவர்கள் நமக்கு நல்லவர்கள்	யாருடன் பேசினால் உடல் சோர்ந்துவிடுகிறதோ அவர்கள் சக்தியை விரயம் செய்பவர்கள்
4) யாருடைய தொடர்பு நல்லதை விளைவிக்கிறதோ அவர்கள் நமக்கு நல்லவர்கள்	யாருடைய தொடர்பு தவற்றை எழுப்புகிறதோ அவர் நமக்கு வேண்டாதவர்கள்
5) அன்னையை மட்டும் நம்புபவர்கள்	அன்னை மீது நம்பிக்கையில்லாதவர்.

உடையால் ஒருவரை யதார்த்தமாக நம்பமுடியாது. மனித குணத்தை உடை மாற்றிக் காட்டவல்லது. குரலும், தொனியும், பாணியும் நன்றாக இருந்தால் படிப்பு, பண்பு, குறைவாக இருப்பதையும் மறைக்கும். சரளமாகப் பேசுபவர்களைப் பொதுவாகப் புத்திசாலி என நினைக்கிறோம். நல்ல அறிவாளி சரியாகப் பேச முடியாவிட்டால் அவர் அறிவைப் பேச்சு மறைக்கிறது.

வீட்டில் எளிமையாகப் பழகும்பொழுது ஒரு தலைவரின் திறமை தெரிவதில்லை. அன்னை பவித்திராவை அறிவார். பவித்ரா காலமான பின் அவர் பழைய ஜென்மத்தில் பௌத்தமத யோகியாக இருந்தார் என அன்னை அறிந்து "இதுவரை நான் இதை அறியவில்லை" என்றார். உடனிருந்தாலும், அன்னைக்கு பவித்திராவினுள் மறைந்துள்ள யோகப்பயிற்சி தெரியவில்லை.

பஞ்சகன்னிகைகளில் ஒருவரான திரௌபதியின் மனத்தின் ஆழத்தில் உள்ள ஆசை கிருஷ்ணபரமாத்மா கேட்டபொழுதே வெளி யில் வந்தது. பள்ளியில் 20, 30 **rank** வாங்கும் மாணவர்கள் கல்லூரிப் பேராசிரியராகவும், எழுத்தாளர்களாகவும், தலைவர்களாகவும் பிற் காலத்தில் வந்தால் "இங்கே படிக்கும் பொழுது எங்களுக்கெல்லாம் இவன் மக்கு என்றுதான் தெரியும்" என்பது வழக்கம். ஹெலன் கெல்லர், ஐன்ஸ்டீன், நேரு, ராமானுஜம் இவர்களைச் சிறுவயதில் எவரும் கண்டுகொள்ளவில்லை. ஐன்ஸ்டீனின் முதல் மனைவிக்கு அவரால் தனக்குப் பலனில்லை என்று தெரிந்தது. 1930இல் அன்னை நேரு இந்தியாவின் தலைவராவார் என்றதை எவரும் நம்பவில்லை.

ஊனக்கண்ணுக்குத் தெரியாத குணங்கள் சூட்சுமப்பார்வைக்குத் தெரியும்.

❊ ❊ ❊

"பகவானுடைய இதரநூல்கள்''

யோகக் குறிப்புகள்

இந்தியப் பரம்பரை கர்ணபரம்பரை. எழுத்தில் எதுவுமிருப்பதில்லை. மேலும் இரகஸ்யம் முக்கியம். குரு தம் ஞானத்தை சிஷ்யனுக்கு மட்டும் கொடுப்பார். அதுவும் அவர் மனம் எந்த சிஷ்யனால் இனிக்கிறதோ அவனுக்கே கொடுப்பார். அதைத் தம் உயிர் பிரியுமுன் அவனை அழைத்து இரகஸ்யமாகச் சொல்லுவார். சிஷ்யன் அதை பிறரிடம் சொல்லக்கூடாது. சொன்னால் பாவம், அவனுக்குப் பலிக்காது. இதுவே நம் ஆன்மீகப் பரம்பரை.

ஸ்ரீ அரவிந்தர் இப்பரம்பரையைப் பின்பற்றினார் என்றாலும், நேர் எதிராக நடந்தார் என்றாலும் இரண்டும் உண்மையாகும். ஏனெனில், ஸ்ரீ அரவிந்தர்,

> **ஒரு கருத்து உண்மையானால், அதற்கு எதிரான கருத்தும் உண்மை**

என்று கூறியிருக்கிறார். வாழ்வில் இது உண்மை. மிகவும் கடுமைக்கும், கண்டிப்புக்கும் உட்பட்ட குழந்தையின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். கண்டிப்பு, கடுமையே அறியாத சுதந்திரமாக இனிமையாக வளர்க்கப்பட்ட குழந்தையின் எதிர்காலமும் சிறப்பாக இருப்பதுண்டு. யோக இரகஸ்யங்கள் பரம்பரையாக யோக இரகஸ்யமாகவே இருந்தன. இன்றும் இருந்து வருகின்றன. ஸ்ரீ அரவிந்தர் அது போன்ற இரகஸ்யங்களை, விவரமாக, வெளிப்படையாக நோட்டில் எழுதி வைத்துள்ளார். **Archives** பழைய செய்திகளைத் தாங்கிவரும் பத்திரிகையில் 1980க்கு மேல் இச்செய்தி கள் வெளிவருகின்றன. தினமும் தம் யோகத்தில் நடந்தவற்றை மணிக்கு மணி ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ளார். இவற்றின் தத்துவங்கள் **Synthesis of Yoga** என்ற நூலில் நான்காம் பாகம் பூரண யோகத்தைப் பற்றியது. அதில் 25 அத்தியாயங்களில் பகவான்

எழுதுவது இந்த யோகக்குறிப்புகளில் சொந்த அனுபவமாகக் காணப்படுகிறது.

யோகானுபவங்களை 7 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றை யும் சிறு பகுதிகளாகப் பிரிக்கிறார். இவை பெரும்பாலும் மரபிலுள்ளவை, என்றாலும் பகவான் செய்த யோகம் மாறுபட்டிருக்கும். நாம் மாட்டுவண்டி, குதிரைவண்டியை வண்டி என்கிறோம். இன்று "வண்டி" என்றால் மோட்டார் பைக், கார், பஸ், ரயில் எனப்படும். மௌனம் என ரிஷிகள் கூறுவது மனத்தின் மௌனம். மௌனம் என பகவான் கூறுவது சத்திய ஜீவிய மௌனம். வித்தியாசம் ஏராளம். மாட்டுவண்டிக்கும் பஸ்ஸுக்கும் உள்ள வித்தியாசமாகும். பரம்பரையான சொற்களில் புதிய யோகத்தை பகவான் விளக்குகிறார். அந்த ஏழு பகுதிகள்

1) சமதா சதுஷ்ட்டயா
   சமதா, சாந்தி, சுகா, ஹாஸ்யா (அ) ஆத்மாபிரசாதா
2) சக்திசதுஷ்ட்டயா,
   வீர்யா, சக்தி, தெய்வபிரகிருதி, சிரத்தா
3) விஞ்ஞான சதுஷ்ட்டயா,
   ஞானம், திரிகால திருஷ்ட்டி, அஷ்ட சித்தி, சமாதி
4) சரீர சதுஷ்ட்டயா,
   ஆரோக்கியா, உத்தாபானா, சௌந்தரியா, அனந்தா
5) கர்ம சதுஷ்ட்டயா,
   கிருஷ்ணா, காளி, கர்மா, காமா
6) பிரம்ம சதுஷ்ட்டயா,
   சர்வம் பிரம்மா, அனந்தம் பிரம்மா, ஞானம் பிரம்மா, ஆனந்தம் பிரம்மா
7) யோக சதுஷ்ட்டயா,
   சுத்தி, முக்தி, புக்தி, சித்தி

❊ ❊ ❊

P. 119

Mind Understands not knowledge, but its own analysis

மனத்தால் ஞானத்தை அறியமுடியாது. மனம் தன்னையே அறியும்

“தான் கண்டவாறே காண்பவனை” வள்ளுவர் அறிவற்றவன் என்கிறார். மின் விளக்கைப் பற்றி எல்லா விவரங்களையும் அறிந்தபின் எண்ணெய் எங்கு ஊற்றுவார் எனக் கேட்பவன், தான் அறிந்த எண்ணெய் விளக்கையே நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம்.

மனம் என்பது சிருஷ்டியின் கருவி. தானே சிருஷ்டிக்கும் தன்மையுடையதன்று. பேனாவைப் போன்றது. பேனா எழுதும் கருவி. பேனாவுக்குச் சொந்தமாக எழுத வராது. நாம் மனம் ஞானபீடம் எனக் கருதுகிறோம். ஸ்ரீ அரவிந்தம் அடிப்படையில் மரபிலிருந்து மாறுபடும் இடங்களில் இதுவும் ஒன்று.

புத்தகத்திலுள்ளதை ஆசிரியர் விளக்கும் திறன் பெற்றவர். புத்தகம் எழுதியது ஆசிரியர் அல்லர். நியூடன், வால்மீகி, தாகூர் எழுதியதை ஆசிரியர் புத்தகத்திலிருந்து வகுப்பில் போதிக்கிறார். வகுப்பு ஆசிரியர் நியூடனோ, தாகூரோ அல்லர் என்பதுபோல் மனம் ஞானத்தின் உறைவிடமன்று. தம் சிந்தனையை மட்டும் கருவி மனம் என்கிறார் பகவான்.

ரிப்பேர் செய்பவனுக்கு ரேடியோவை ரிப்பேர் செய்ய மட்டும் தெரியும். ரேடியோ செய்யத் தெரியாது. நமக்கு வரும் தபாலை கொண்டு வருபவன் தபால்காரன். அத்தபாலை எழுதியது தபால்காரனல்லன்.

ஸ்ரீ அரவிந்தர் கூறும் இவ்விளக்கம் உலகுக்குப் புதியது. விஞ்ஞானிகளும், மாயாவாதிகளும் கூறுபவை மனமே ஞானத்தை அறியும் எனப் பொருள்படுவதால் பகவான் மறுப்பாக இக்கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

சர்க்கார் மக்கள் சார்பாகப் பணத்தை அச்சிட்டு வழங்குகிறது. சர்க்காரிடம் பணம் என்று ஒரு ரூபாயுமில்லை. பணத்தை உற்பத்தி செய்வது மக்கள் உழைப்பு. மக்களின் உழைப்பில் உற்பத்தியான பணத்தை அச்சிட்டு வினியோகம் செய்யும் கடமையைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது. பொதுவாக நாம் சர்க்காரிடம் எல்லாப் பணமும் இருப்பதாகப் பேசுகிறோம், நினைக்கிறோம். “நான் என்ன கஜானாவா?” என்கிறோம்.

மனம் என்பது என்ன என்று ஆழ்ந்துணருபவர்க்குக் கவலை என்பதிருக்காது. குழப்பம் எழாது. இறைவனை எளிதில் நினைக்கலாம். நிம்மதியைச் சுலபமாக அடையலாம். மனம் கருவி என்றறிபவன் ஞானத்தை அடைய அது உதவும். **Mind is ignorance seeking knowledge.** அறிவைத் தேடும் அறியாமை என்பதே மனம் என்கிறார் பகவான்.

❊ ❊ ❊

ஸ்ரீ அரவிந்த சுடர்

“உங்கள் திருவுள்ளம் நிறைவேறட்டும்” எனச் சொல்லி பரவசமடைவது சரணாகதியின் உச்சகட்டம்

தமிழாசிரியர்

(மே 2000 இதழ் தொடர்ச்சி) இல. சுந்தரி

'நம்ம தெரு திரும்புற இடத்தில வயக்காடு இருக்கே, அங்கே நெறைய எருக்கஞ்செடியிருக்கு'.

'சரி, நீ சிறிது எருக்கம்பூப் பறித்துக் கொண்டு வா. பறிக்கும்போது கவனமாயிரு. அதன் பால் கண்ணில் பட்டால் கண் பார்வை போய்விடும். பூவைக் கொண்டுவந்து அம்மாவுக்கு வைத்துவிட்டுச் சிறிது பூவை பையில் வைத்துக்கொள். பயமே வராது. எந்தத் தீயதும் உன் பக்கம் வராது' என்றார்.

"இதோ ஒரு நொடியில் எருக்கம்பூ கொண்டு வந்திடறேன் சார்" என்று ஓடினான். பறித்து வந்து தட்டில் வைத்து கண்மூடித் தியானித்து சில பூவைச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு சென்றான்.

மதியம் காரியரில் சாருக்குச் சாப்பாடு கொண்டு கொடுத்துவிட்டு மாடுகளை ஓட்டிப் போனான். சார் சொன்னது மெய்தான். பயமேதும் தோன்றவில்லை.

மறுநாள் திடீரென உறவினர் வீட்டிலிருந்து செட்டியாருக்கு அழைப்பு வந்தது. இராப்பயணம் குறித்து எஜமானியம்மாள் அஞ்சினாள். முதலாளியோ உடனே புறப்படவேண்டிய அவசியத்தில் இருந்தார். வேலு குறுக்கே வந்து, "வாத்தியார் சார் வீட்ல இருக்கற அம்மா சாமிக்கு எருக்கம்பூ வைச்சு அதைக் கையில எடுத்துக்கிட்டா கெட்டது வராது. பயமே இருக்காதுன்னு வாத்தியார் சார் சொன்னாரு. நாங்கூட உச்சிப்போதுல காட்டுப்பக்கம் போறப்ப இப்பல்லாம் எருக்கம்பூ எடுத்திட்டுத்தான் போறேன். பயமேயில்ல, உங்களுக்கும் ஒரு பூ கொண்டு வரேன் ஐயா" என்றான்.

இது என்ன புதுசாயிருக்கு என்று எண்ணிய செட்டியார் இப்போது செல்ல வேண்டிய அவசியத்தை வேண்டி, 'சரி சரி ஏதாவது

செய்' என்று சொல்லிவிட்டு, "கருப்பா! வண்டி கட்டு" என்றார்.

மறுநாள் செட்டியார் திரும்பும்வரை எஜமானியம்மா கவலையால் புலம்பினார். வேலுதான், 'பயப்படாதீங்கம்மா, வாத்தியார் சார் வீட்டு அம்மாவுக்கு வெச்ச பூவை ஐயா கொண்டுகிட்டு போயிருக்காரு. அம்மாவுக்கு சக்தி அதிகம். ஐயா நல்லபடியா வந்திடுவாரு" என்று தைரியம் கூறினான்.

மறுநாள் சிரித்துக் கொண்டே வந்த செட்டியார், 'எலே வேலு நல்ல வேலைதான் செஞ்ச. நேத்து அடுத்த டவுன்ல மந்திரி பேச வராருன்னு வழியெல்லாம் லைட்டுப்போட்டு போலீஸ் காவல் வேற. ஒரு பயமும் இல்லாம போய்வந்தேன்' என்றார்.

'அதான் ஐயா. வாத்தியார் சார் வூட்ல அம்மா தெய்வம்னு ஒண்ணு இருக்கு. அதுக்கு ரொம்ப சக்தினு சார் சொல்வாரு, அது நெசந்தான்' என்றான் கையைக் கட்டியவண்ணம்.

'அப்போ சரி. நாளைக்கு டவுன்ல பம்பு செட்டு வாங்கனும். கெடைச்சா அதிஷ்டம்தான்' என்றார் செட்டியார்.

"நானும் ஒங்ககூட வரேன் ஐயா. சார் வீட்டு அம்மாவை வேண்டிக்கிட்டு பூ எடுத்துவரேன்" என்றான். செட்டியாருக்கு லேசாய் ஒரு நம்பிக்கை ஒடிற்று.

மறுநாள் அம்மாவுக்குப் பூ வைத்து வேண்டிக்கொண்டான். ஒரு பூவைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு எசமானுக்கும் ஒரு பூ எடுத்துக் கொண்டான். 'என்ன வேலு? அம்மாவிடம் ஏதாவது முக்கியப் பிரார்த்தனையா?' என்றார் ஆசிரியர்.

'ஆமா சார் எங்க ஐயா பம்புசெட் வாங்க டவுனுக்குப் போறார். கிடைக்கணும்னு வேண்டிக்கிட்டேன்' என்றான்.

"உன் நல்ல மனதிற்கு அம்மா நிச்சயம் பலிப்பார்" என்று கூறியனுப்பினார் ஆசிரியர். தன் எசமானிடம் ஒரு பூவைக் கொடுத்தான். அவர் அதைத் தம் சட்டைப் பையில் வைத்துக்கொள்ள

இருவரும் கிளம்பினர். பஸ் ஸ்டாண்டிற்குப் போனவுடன் ராவுத்தர் ஓடிவந்து நாற்காலி போட்டு உபசரித்தார். 'இன்று பஸ் வராதுன்னு பேசிக்கிறாங்க. டவுன்ல ஏதோ கலாட்டாவாம்' என்றார் ராவுத்தர்.

'என்ன இது கிளம்பும் போதே தடை என்று எண்ணினார்.

அதே நேரம் ஒரு கார் வந்து இவரருகே நின்றது. காரிலிருந்து இறங்கியது பட்டணத்திலிருக்கும் இவர் மகனுடைய நண்பன். செட்டியாரைக் கண்டதும் இறங்கி அருகில் வந்து, 'என்ன ஐயா இங்கிட்டு? எங்காவது போகணுமா? வாங்க நம்ப கார்ல போகலாம்' என்றான்.

"டவுனுக்குப் போகணும், பஸ் வராதுன்னு பேசிக்கிறாங்க" என்றார் செட்டியார். 'நம்ப கார் இருக்கும்போது பஸ் எதுக்கு? வாங்க' என்று வலிய அழைத்துப்போய் போக வேண்டிய இடத்தில் விட்டான். பம்புசெட்டுக்கு மனுச் செய்திருந்த இடத்தில் ஏகப்பட்ட கும்பல். முதல் 25 பேருக்குத்தான் இன்று டெலிவரியாம். இவருக்கு அதில் வாய்ப்பில்லை. 'என்னடா வேலு?' என்று சோர்வாய்க் கூறினார்.

'அதெல்லாம் கவலைப்படாதீங்க எஜமான். சார் வீட்டு அம்மாவை நெனச்சு ஒரு காரியம் செஞ்சா தோல்வியே கிடையாது. நீங்க ஒங்க சவுகரியத்துக்கா வாங்குரீங்க, .ஊர் மக்களுக்குத்தானே வாங்குரீங்க. ஒங்க நல்ல மனசுக்குத் தடை வராது எசமான். நான் கொஞ்சநேரம் ஓரமா உட்கார்ந்து அம்மாவை மனசுல நெனச்சுக்கிறேன். அம்மா உதவி செய்வாங்க' என்று ஒரு ஓரமாகக் கண்ணை மூடி மனதில் முகமெலாம் மலர்ந்து சிரிக்கும் அம்மாவை நினைத்தவண்ணம் உட்கார்ந்துவிட்டான். 'அம்மா நெனவு தெரிஞ்ச நாளா எசமானுக்கு உழைக்கறத தவிர எனக்கு ஒண்ணுமே தெரியாதும்மா. ஒங்களை பார்த்தபிறகுதான் எனக்கு, சாமி கும்பிடற எண்ணமே வருது. நீங்க ரொம்ப நல்லவங்கன்னு வாத்தியார் சார் சொன்னார். எங்க எசமானும் ரொம்ப நல்லவர். அவர் ஏமாந்துடாமே நீங்கதான் உதவணும்', என்று மானசீக வழிபாடு நடந்தவண்ணம் உள்ளது.

திடீரென ஆபீஸ் ரூமிலிருந்து வெளியே வந்த ஒருவர் ராதாகிருஷ்ணசெட்டியாரைப் பார்த்தவுடன் "அடடா ஐயாவா நல்லா இருக்கீங்களா?" என்று அருகில் வந்தார். 'நல்லா இருக்கேன் தம்பீ. பம்புசெட்டுக்கு மனுச் செய்திருந்தேன் கிடைக்காது போலிருக்கு' என்றார். 'அடடா உங்களுக்கு இல்லாமலா? ஊருக்கு நல்லது செய்பவ ரல்லவா நீங்கள்? உங்கள் உதவி இல்லாது போனால் இவ்வளவு நல்ல நிலை எனக்குக் கிடைத்திருக்குமா? எனக்கு "டெலிவரி" கிடைத்துவிட்டது. அதை உங்களுக்குத் தருகிறேன். எனக்கு அவசரம் ஒன்றுமில்லை;' என்று உடனே வண்டியிலேற்றி ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார். விடைபெற்ற செட்டியார், "வேலு! உன் தவம் பலிச்சுடுத்து எந்திரிச்சு வா" என்றார். "என்ன ஐயா, கெடச்சுடிச்சா?" என்றான் மகிழ்வாக. 'ஆமாம் வேலு' என்றார் உற்சாகமாக. வேலு மனதில் அம்மாவுக்கு நன்றி சொன்னான். பஸ்ஸைவிட்டு இரங்கியதும் மறவாமல் அம்மாவுக்குப் பக்கத்தில் கிடைத்த பூக்களைச் சேகரித்துக் கொண்டான். உள்ளூர செட்டியாருக்கும் நன்றி உணர்விருந்தது. 'வேலு நீ சாமிக்குப் பூ கொடுத்திட்டு வா நான் முன்னால போகிறேன்' என்றார். சார் வீட்டு அம்மாவைப் பார்க்க ஓடினான் வேலு.

தினமும் சிறிது நேரம் ஆசிரியரிடம் வந்து ஏதாவது நல்ல செய்திகளைத் தவறாது கற்றான். அன்னைக்கு வாய்த்த போதெல் லாம் கிடைத்த பூக்களையெல்லாம் தவறாது கொண்டுவருவான்.

கவுண்டர் ஐயா மகன் பட்டணத்தில் வேலைக்குச் சேர நேர்முகத் தேர்வுக்குப் போகிறான். இவன் டவுன் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியிருந்தான். வேலை கிடைக்கவேண்டும் என்ற படபடப்பில் பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்தான். எஜமானுக்கு வெற்றிலைச் சீவல் வாங்க வெற்றிலைக் கடைக்கு வந்த வேலு மாணிக்கத்தைப் பார்த்ததும் தெரிந்தவன் என்ற முறையில் சிரித்தான். 'என்ன அண்ணே வேலைக்குப் போறீங்ளா?' என்று அன்புடன் அருகில் வந்து கேட்டான். 'வேலை கெடைக்குமான்னு பார்க்கப் போறேன் வேலு. ஒரே டென்ஷனாயிருக்கு எத்தனை முறை போய் திரும்பி வந்திருக்கேன்', என்றான் சோர்வாய்.

‘பயப்படாதீங்க அண்ணே. எங்க வாத்தியார்சார் வீட்ல அம்மான்னு ஒரு சாமியிருக்கு அதை வேண்டிக்கிட்டா எல்லாம் நல்லா நடக்கும்’.

‘ஆமாம் வேலு எல்லாத் தெய்வத்தையும் வேண்டியது கும்பிட்டாச்சு. ஒவ்வொரு முறையும் வேலை கெடைக்காமல் திரும்புகிறேன்’ என்றான்.

‘இல்ல அண்ணே இந்த அம்மாவுக்கு எதுவும் காவு கொடுக்கத் தேவையில்லை. நம் மனம் சுத்தமாயிருந்தா போதும். நம் நியாமான தேவையை அம்மா நெறவேத்தி வைப்பாங்கன்னு வாத்தியார் சார் சொல்லுவாரு. நீ வேணுமின்னா பாரு இந்தா இந்தப் பூவைப் பத்திரமா சட்டைப்பையில வச்சுக்க’, என்று தன் சட்டைப்பையிலிருந்து ஒரு மஞ்சள் பூவைக் கொடுத்தான். தினமும் அம்மாவிடமிருந்து ஏதேனும் பூவை எடுத்து வைத்துக்கொள்வது அவனுக்கு வழக்கமாகிவிட்டது. ‘அண்ணே நிச்சயமா இந்த முறை உனக்கு வேலை கெடச்சுடும் பாரு’ என்றான்.

மாணிக்கம் திரும்பிவந்து நல்ல செய்தி சொல்லுவான் என்று திடமாக நம்பினான். மேலும் அவனுக்காக அம்மாவிடம் வேண்டிக்கொண்டான்.

இரண்டு தினங்களுக்குப்பின் ஒரு நாள் பஸ் ஸ்டாண்டுக் கடையில் ஏதோ வாங்கிக்கொண்டு திரும்பும்போது பட்டணத்துப் பஸ் வந்து நின்றது. முகமலர்ச்சியுடன் மாணிக்கம் இறங்கினான். ‘அண்ணே’ என்று ஓடிச் சென்றான் வேலு.

‘வேலு உன் வாக்குப் பலித்துவிட்டது. உன்னிடம்தான் முதலில் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். நீயே வந்து விட்டாய். நீ கொடுத்த பூவைப் பத்திரமாய் பர்சுக்குள் வைத்திருந்தேன். அத்தனை பேரில் எனக்கு எப்படி வேலை கிடைத்தது என்றே தெரியவில்லை வேலு. நீ சொன்ன அந்த அம்மாதான் துணையிருந்தாங்க’ என்றான்.

‘அம்மாவிடம் சொல்லிவிட்டால் நடக்காது போகுமா?’ என்றான் வேலு பெருமிதமாக.

‘அது சரி. யார் அந்த அம்மா?’ என்றான் வேலுவிடம். ‘வாங்க அண்ணே போகும் வழியில் சார் வீட்டிற்குள் நுழைந்துவிட்டுப் போகலாம் முன்னறையில்தான் அம்மா இருக்காங்க’, என்றான் வேலு.

இவன் யாரைப்பற்றிச் சொல்கிறான் என்று ஆவலுடன் வந்தான் மாணிக்கம். இவர்களைக் கண்டதும் ஆசிரியர், ‘வாங்க, வா வேலு’ என்று அன்புடன் அழைத்தார்.

‘சார் இரண்டுநாளுக்கு முன்னால இந்த அண்ணன் பட்டணத் துல வேலை தேடப் போச்சு. அப்ப நான் நம்ம அம்மா விடமிருந்து எடுத்த பூவைக் கொடுத்தனுப்பினேன். அண்ணனுக்கு வேலையும் கெடச்சுடுத்து. அதான் அண்ணன் அம்மாவைப் பார்க்க ஆசைப்பட்டுது கூட்டியாந்தேன்’ என்றான் வேலு.

‘என்ன பூ? மஞ்சள் நிறத்தில் இருந்ததே அந்தப் பூவைக் கொடுத்தாயா?’ என்றார்.

‘ஆமாம் எப்படிச் சொல்றீங்க. நான் பூ எடுக்கும்போது நீங்க தோட்டத்திலேயில்லே இருந்தீங்க’ என்றான்.

‘அந்தப் பூவின் பெயரே வெற்றி என்று அம்மா சொல்லியிருக் காங்க. எப்படி வெற்றி வராமல் போகும்?’ என்றார் ஆசிரியர்.

அறைக்கதவைத் திறந்து உள்ளே அழைத்துப்போனார். மாடத்தில் வேலு அம்மா என்று குறிப்பிட்டவரின் திருவுருவப்படம் அதற்கு முன்னால் பெரிய மேசையொன்றில் தூய்மையான துணி விரிக்கப் பட்டு அதன் மேல் ஊரில் உள்ள அத்தனை விதமான மலர்களும் அழகழகாய் அடுக்கப்பட்டிருந்தன. இந்தப் பூக்களெல்லாம் எத்தனை அழகு என்பதே இப்போதுதான் புரிவது போலிருந்தது. அந்த அம்மா வின் கண்கள் இவனைப் பார்த்து “மகிழ்ச்சிதானா?” என்று விசாரிப் பது போல் தோன்றவே, “ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கு அம்மா” என்று மெய்ம்மறந்து வாய்விட்டுக் கூறினான். ‘என்ன அண்ணே. அம்மா கிட்டே பேசுறியா?’ என்றான் வேலு. ‘ஆமாம் வேலு. வேலை கெடச்சது மகிழ்ச்சிதானேன்னு கேட்கிற மாதிரியே இருக்கு’ என்றான்.

இவர்களுடைய கள்ளமில்லாத மனங்களைக் கண்டு ஆசிரியர் ரசித்தார்.

"வேலு எல்லார் துன்பமும் தீருதே. என் துன்பம் ஏன் தீரலை?" என்றாள் வேலைக்காரப் பொன்னம்மா. இவள் மகன் வீட்டை விட்டு ஓடிவிட்டான். 10 வருடங்களாக மகன் வருவான் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தாள். காளியாயிக்கு எத்தனை முறை நேந்துகிட்டேன். எதுவும் நடக்கலியே என்று விம்மினாள்.

'வாத்தியார் சார்கிட்ட சொல்லி உனக்கொரு வழி கண்டுபிடிக்கிறேன்' என்றான் வேலு.

மறுநாள் காலை பொன்னம்மா வீடு கூட்டும்போது 'ஐயா, அறை வீட்ல அம்மா படம் வெச்சிருக்கீங்களாமே அவங்ககிட்ட வேண்டிக்கிட்டா எல்லாம் பலிக்கும்னு வேலு சொல்லுதே' என்றாள்.

'ஏன்? உனக்கு என்ன பலிக்கவேண்டும்?' என்றார். 'என் மகன் சின்ன வயசுலே வீட்டைவிட்டு ஓடிட்டான். 10, 12 வருஷமாச்சு இன்னும் ஒரு தகவலும் தெரியல. திரும்பி வரமாட்டானான்னு மனசு ஏங்குது சாமி' என்றாள்.

'சரி உன் மகன் ஏன் வீட்டைவிட்டுப் போனான் என்ற காரணத்தை யோசித்துப் பார். நீயோ, உன் புருஷனோ அவன் நோகும்படி ஏதாவது சொல்லியிருந்தால் அதை நினைத்துப்பார்த்து அந்தத் தவற்றை இனிமேல் செய்வதில்லை என்று அம்மாவிடம் சொல்லி உன் மகன் திரும்பி வரவேண்டும் என்று வேண்டிக் கொள் தானாக வந்துவிடுவான்', என்றார்.

தான் தன் மகனைத், 'தண்டச்சோறு' என அடிக்கடி கடுஞ்சொல் கூறித் திட்டியதையும், படிக்கும் வயதில் அவன் நிறைய சம்பாதித்து வரவேண்டும் என ஆசைப்பட்டு அடித்ததையும் மனம் உறுத்த, "அம்மா சின்ன புள்ளய நா அப்பிடிப் பேசினது தப்புத்தான். இனிமே அப்படியெல்லாம் பேசலை தாயி. என் மகனைக் கொண்டுவந்து எங்கிட்ட சேர்த்திடு தாயி" என்று மனம் உருகி வேண்டிக்கொண்டு தோட்டத்திலிருந்து பூவும் பறித்து வந்து வைத்துச் சென்றாள்.

செட்டியார் வீட்டிற்குப் பொன்னம்மா பேருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. என்னவென்று பார்த்தால் தன்னைத் தன் தாய் தண்டச்சோறு என அடிக்கடி திட்டியது பொறுக்காமல் வீட்டைவிட்டு வெளியேறியதாயும் ஆனால் இப்போது ஒரு முதலாளியிடம் வேலையில் சேர்ந்து நன்றாக இருப்பதாகவும் விரைவில் அம்மாவைப் பார்க்க வருவதாகவும் பாசத்துடன் எழுதியிருந்தான் பொன்னம்மாவின் மகன்.

பொன்னம்மாவுக்கு மெய் சிலிர்த்தது. கண்ணீர் வந்தது. நேற்று தான் வேண்டினாள். இன்று உடனே மகனிடமிருந்து தகவல் வந்து விட்டது. "ஐயா, ஒங்க அம்மா தெய்வந்தாங்க" என்றாள் ஓடி வந்து.

"அது எங்க அம்மா இல்ல. நம்ப அம்மா" என்று திருத்தினார்.

'ஆமா சாமி. நம்ப எல்லாருக்குமே அவங்கதான் அம்மா' என்றாள். இதைக்கேட்டு இவள் புருஷன் கருப்பன் விதண்டாவாதம் செய்தான். என்னிக்கோ ஓடிப்போனவனுக்கு ஊர் நெனப்பு வந்திருக்கு. கடுதாசு போட்டிருக்கான் இதைப்போய் பெரிசுபடுத்தறியே என்றான் அலட்சியமாக.

இவனுக்கு எப்படி விளக்குவது என்று தவித்தது பொன்னம்மாவின் மனம்.

அப்பொழுதுதான் செட்டியார் பக்கத்து கிராமத்திலுள்ள நண்பர் ஒருவருக்கு அவசரச் செய்தியும் முக்கியமான பொருளும் கொடுத்து வரச்சொல்லி கருப்பனை வண்டி கட்டச் சொன்னார். வேலுவைத்தான் கடிதத்தையும் பொருளையும் எடுத்துப்போகச் சொன்னார். வேலு வண்டியில் ஏறுமுன் சார் வீட்டு அம்மாவிடமிருந்து காகிதப்பூவை எடுத்துவந்து சட்டைப்பையில் வைத்துக்கொண்டு அம்மாவை வேண்டிக்கொண்டு புறப்பட்டான். 'இந்தக் காகிதப்பூதான் உனக்குக் காவல் இருக்கப் போகுதா?' என்று கூறிச் சிரித்தான் கருப்பன்.

'ஆமாம் இந்தப் பூ எங்க அம்மாவிடமிருந்து எடுத்தது. இதைப்பத்தி ஒனக்குத் தெரியாது' என்றான் வேலு. 'சரி சரி

காகிதப்பூவே ஒன்னைக் காப்பாத்தட்டும்', என்று கிண்டலாகச் சொல்லி வண்டியை ஓட்டினான். போன வேலை முடிந்து திரும்பி வரும்போது பயங்கரமான வளைவு ஒன்றில் திரும்பும்போது எதிர்பாராமல் எதிரே லாரி வர வண்டியை ஓரம்கட்ட முடியாமல் திணறினான் கருப்பன். மாடு மிரண்டது. 'அம்மா! காப்பாத்து' என்று கத்தினான் வேலு. ஒரு நூலிழை இடைவெளியில் லாரி கடந்துபோக, சக்கரம் எதிலோ செருகிக்கொண்டு நின்றது. இல்லையென்றால் பள்ளத்தில் கவிழ்ந்திருக்கும். மாடும் மனிதர்களும் காணாமற் போயிருக்கக்கூடும். கருப்பன், ''வேலு உங்க அம்மாதான் காப்பாத்தினாங்கன்னு புரியுது. அம்மா என்னை மன்னிச்சுக்க'' என்றான். "எங்க அம்மா இல்ல. நம்ப அம்மா" என்றான் வேலு.

அன்று ஞாயிற்றுக்கிழமை. வார விடுமுறை. ஆசிரியர் குளித்து வேட்டி உடுத்தி மேலே துண்டைப் போர்த்திக்கொண்டு பொறுமையாக பூக்களுடன் வந்து அறையைத் திறந்தார். வேலு சோகமாய் வந்தான். 'என்ன வேலு?' என்றார்.

'எங்க அம்மாவுக்கு ஒடம்பு சொகமில்லை. ராத்திரியெல்லாம் தூக்கமில்லை. ஒரே கவலையா இருக்காங்க சார். உங்களிடம் அம்மாவுக்கு வச்ச பூ வாங்கிப்போக வந்தேன்' என்றான்.

'வேலு உன் வெள்ளையுள்ளத்திற்கு அம்மா வேண்டியதைத் தருவாங்க. நான் சொல்கிறபடி செய். பூவரசமரம் எங்கேயிருக்கிறது தெரியுமா? என்றார்.

'ஓ தெரியுமே. அடுத்த தெரு மாணிக்கம் ஐயா வீட்டுக்கு முன்னால இருக்கு. குவளை குவளையா பூப்பூத்திருக்கே'.

"சரி அந்தப் பூவை முடிந்தால் கொண்டுவா" என்றார். 'இதோ ஒரு நொடியிலே வரேன் சார்' என்று ஓடினான். சற்று நேரத்தில் துண்டில் நிறையப் பூக்களைப் பறித்து வந்திருந்தான்.

'இந்தா, இந்தத் தட்டில் வேண்டிக் கொண்டு நீயே வை' என்றார். "அம்மா உன்னத் தெரிஞ்ச நாளிலேருந்து உன்னைத்தவிர எனக்குத்

துணை எதுவும் தெரியல. இப்பவும் எங்க அம்மா, ரொம்ப நல்லவங்க. அவங்களுக்கு ஒரு கஷ்டமும் வரக்கூடாதுன்னுதான் வேண்டிக் கிறேன்" என்று பூவை அழகுற அடுக்கினான். தட்டை அம்மாவின் முன் வைத்து கண்மூடி வணங்கினான்.

ஆசிரியர் அவன் செயலை ஆர்வமாய்க் கவனித்தார். பிறகு ஒரு பூவை எடுத்து அவனிடம் தந்து, 'இதை ஒங்க அம்மா கையில கொடு. நம்புவாங்களா?' என்றார். 'நம்புவாங்க, நம்பலையின்னா எங்கையில வச்சுகிட்டு அவங்க பக்கத்திலயே நின்னு வேண்டிப்பேன் சார்' என்றான்.

இவனுடைய ஆழமான நம்பிக்கைக்கு அன்னை விரைவில் பலித்துவிடுவார் என்று எண்ணிக்கொண்டு அனுப்பி வைத்தார்.

மறுநாள் காலை மலர்ச்சியாக வந்தான் வேலு.

''என்ன வேலு? அம்மா எப்படி இருக்காங்க? நானே வரலாமென்றிருந்தேன். வந்தவுடன் முதல்நாள் அன்று பலகாரமும், சாப்பாடும் அனுப்பிய புண்ணியவதி நல்லாகணும்னு நானும் வேண்டிக் கொண்டேன்" என்றார்.

'நீங்க கொடுத்த பூவரசம்பூவை அம்மாவிடம் கொடுத்து அம்மாவின் பெருமையெல்லாம் சொன்னேன். சின்னபுள்ளமாதிரி "நானும் நல்லா ஆயிடுவேனா வேலு" என்றாங்க. பூவை பத்திரமா வச்சிட்டாங்க. காலையல தூங்கிவிழிச்சமாதிரி நல்லா ஆயிட்டாங்க', என்றான். 'சரி வா நானும் உங்க ஐயாவைப் பார்த்து விசாரிக்கிறேன்' என்று புறப்பட்டார்.

உள்ளே நுழைந்ததும் ஆடிக்கொண்டிருந்த ஊஞ்சலின் ஆட்டத்தைக் காலினால் நிறுத்தி எழுந்தார் செட்டியார். "வாங்க சார்" என்று அன்புடன் வரவேற்றார். முதன்முதல் வந்தபோதும் அன்பாகவே வரவேற்றார். ஆனால் ஆசிரியர் வயதில் சிறியவர். தாம் அனுபவசாலி எனவே உட்கார்ந்து வரவேற்கலாம் என்ற எண்ணம் இருந்தது. இப்போது இவரிடம் ஏதோ உயர்வாக

இருப்பதாகவும், மரியாதை தரவேண்டும் என்று உள்ளுணர்வு சொல்லவே எழுந்து வரவேற்றார்.

'அம்மாவுக்கு உடம்பு நலமாயிடுத்தா?' என்றார். 'நல்லாவே குணமாயிடுச்சுங்க. வேலுதான் உங்கவீட்ல உங்க அம்மா படத்துக்கு பூஜைசெய்து பூ தந்தீங்கன்னு சொன்னான்'.

''அவன் சிறுவன். அவன் நான் சொன்னதை அப்படிப் புரிந்துகொண்டான். எங்கள் வீட்டில் இருப்பவர் பெயரே அம்மாதான். அவர்கள் என்னைமட்டும் பெற்றெடுத்த என் தாயில்லை. உலகையே ஈன்ற அன்னை பராசக்தி".

"அடடா அவன் இதைச் சொல்லவேயில்லையே'' என்றார். "அந்தத் தெய்வத்தைப் பற்றிப் படித்தோ, பரம்பரையாகவோ உணர முடியாது. நம் ஆத்மாவினால்தான் உணரமுடியும்". "நான் ஏதோ கொஞ்சம் படிச்சவன்தான். ஆனால் ஆன்மாவைப்பற்றியெல்லாம் எனக்கொன்றும் தெரியாது" என்றார் செட்டியார்.

'ஆன்மா என்பது மனிதனுக்குள் இருக்கும் கடவுளின் பிரதிநிதி. அதன்மூலம் நாம் கடவுளோடு தொடர்பு கொள்ளமுடியும். அதற்கு உள்ளத் தூய்மை வேண்டும். வேலுவின் உள்ளம் தூயஉள்ளம். ஆழ்ந்த நம்பிக்கையும் இருக்கிறது. அதனால் பலிக்கிறது' என்றார் ஆசிரியர். 'அப்படியா' என்று வியந்தார் செட்டியார். 'அந்த அற்புதத்தை அறியாமலிருக்கும் மனிதர்களுக்கு அதை உணர்த்தி வாழும் வழி காட்ட அவதாரம் செய்த தெய்வம் அவர்கள். அவர்களை மதர் என்று ஆங்கிலத்தில் அழைத்தாலும் சரி, "மா" என்று இந்தியில் அழைத்தாலும் ''அம்மா'' என்று தமிழில் அழைத்தாலும் நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அழைக்க வேண்டியதுதான் முக்கியம்'.

'நம் மனம் சுத்தமாக, போட்டி, பொறாமை, சோம்பல் இல்லாமல் இருந்தால் போதும், அதன்மூலம் அவர்கள் சக்தி நம்முள் செயல்படும்' என்று ஆசிரியர் விரிவாகக் கூறினார்.

"கேட்கக் கேட்க ரொம்ப மகிழ்வாயிருக்கு, அந்த அம்மாவின் படம் ஒண்ணுதான் இருக்கா?" என்றார் செட்டியார்.

'எதற்காகக் கேட்கிறீர்கள்?' என்றார் ஆசிரியர். "அவங்களை எல்லாரும் பார்த்துக் கும்பிடாற்மாதிரி ஓர் இடத்தில் வச்சா ஊருக்கே நல்லதாகுமேன்னுதான்" என்றார் செட்டியார்.

"அதனாலென்ன முன்பக்க அறையில்தான் அம்மா இருக்காங்க. அங்கு எல்லோரும் வரலாம். அறையைப் பூட்டி முன்பக்க மாடத்தில்தான் சாவி இருக்கும். வேண்டியவர்கள் வந்து பூ வைக்கலாம் வழிபடலாம்" என்றார் ஆசிரியர். நடந்தவையெல்லாம் ஊரிலும் அக்கம்பக்கத்திலும் பரவியது. அந்த அதிசய அம்மாவைக் காண பலரும் வர ஆரம்பித்தனர். கேட்டவர்க்கெல்லாம் ஆசிரியர் அம்மாவைப்பற்றி, பூக்களைப்பற்றி உளம்கொளச் சொன்னார். அடுத்த சில மாதங்களில் அவருடைய பட்டப்படிப்புக்கு ஏற்ப வேற்றூரில் மேனிலைப் பள்ளிக்கு மாற்றல் உத்தரவு வந்துவிட்டது. அவரை வழியனுப்ப ஊரே வந்தது. அம்மாவை அங்கு நிலைநாட்டிய மகிழ்வுடன் தாம் வழிபட்ட அன்னையை அவ்வூராருக்கே அளித்துவிட்டு மகிழ்வுடன் புறப்பட்டார். வேலு கண்கள் கலங்க 'நம்ப அம்மாவை நான் நல்லா பாத்துக்கிறேன் சார். நீங்க அடிக்கடி வரணும் சார்' என்றான். அன்புடன் அவனை அணைத்து வருவதாக உறுதி கூறினார்.

செட்டியார் தம் நன்றியறிதலை எப்படித் தெரிவிப்பது என்று தவித்தார்.

'ஐயா, நீங்கள் வேலுவைப் பள்ளிக்கனுப்பிப் படிக்கவைத்தால் அதுவே எனக்குச் செய்யும் உபகாரம். அவன் படித்தால் ஊருக்கே உதவியாய் இருப்பான்' என்றார்.

'கட்டாயமா சேர்த்திடறேன் சார்' என்றார் செட்டியார். வேலுவின் தூயவுள்ளத்திற்கும், அன்பிற்கும், உழைப்பிற்கும் பரிசாக அன்னை அவனுக்குக் கல்வியை வழங்க ஏற்பாடு செய்துவிட்டார்.

❊ ❊ ❊

"Conversation"

பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - கலாட்டா, திருடு இரண்டும் மாறி சூழல் சரியாகும் வரை காண்ட்ராக்ட்டுக்கு ஆபத்து. வீடு கட்டும் பொழுது, பிரமோஷன் வரும்பொழுது நாம் இந்த எச்சரிக்கையுடனிருக்கிறோம். *அன்னையிடம் அதே எச்சரிக்கையுடனிருப்பதில்லை.*

தம்பி - எச்சரிக்கையாக இருப்பவர்கள் அன்னை விஷயத்தில் எச்சரிக்கையாக இருந்துவிடுகிறார்கள். இருந்தும் 2 வகைகளில் தப்பு வருகிறது. 1) அன்னையிடம் வேறு சில விஷயங்களும் தேவைப்படுகிறதல்லவா? சந்தோஷமாகப் பாராட்டுவது தவறு என்று சாதாரண மாகத் தெரிவதில்லையில்லையா? அதனால் தவறு வருகிறது 2) மேலும் அன்னை நமக்கு 5 கோடி பெரிய காண்ட்ராக்ட் என்றால் 50 கோடியை கொடுத்துவிடு கிறார்கள். அது நமக்கு நிலை கொள்வதில்லை. வழக்கமான நிதானம் அங்கு தவறிப்போய் விடுகிறது.

அண்ணன் - வாழ்க்கையில் தவறாத விஷயங்கள், அன்னை தரும் விஷயங்களில் தவறும். அதுவும் புரிவதில்லை.

தம்பி - இது முக்கியம். தெரியவில்லை என்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம். பெரியசாமி நண்பர்கள் எல்லாம் **E.B.**இல் கூலி வேலை செய்கிறார்கள். இவன் அங்கு இன்ஜீனியர். பெரியசாமிக்கு அங்கு சூப்பர்வைசராகும் நிலையும் அந்தஸ்தும் இல்லை. அன்னை சூப்பர்வைசர் கிடைக்க முடியாதவனுக்கு இன்ஜினீயர் பதவியைத் தந்துவிட்டார்.

அண்ணன் - விஷயமே அதுதான். இன்ஜினீயர் வேலை வக்கீல் மகனுக்கு வந்தால் அவன் எல்லாருக்கும் சொல்லி

சந்தோஷப்படுகிறான். அது அவனை பாதிப்பதில்லை. பெரியசாமிக்கு இன்ஜினீயர் வேலை வந்தது என்றவுடன் எல்லாருக்கும் அதிர்ச்சி. அது ரத்தாகி விடுகிறது. என்ன தவறு, எல்லாரும் செய்வதைத்தானே நானும் செய்தேன் என்றால் சரி வருமா?

தம்பி - அன்னை கொடுப்பது அவரவர் நிலைக்குப் பெரியது. அதனால் அதிக எச்சரிக்கை வேண்டும். **This is ordinary common sense.** பொதுவாக எல்லோரும் அறிந்ததுதான். இடம், பொருள், ஏவல் பார்த்து செய்யவேண்டும். இல்லை என்றால் விஷயம் கெட்டுப்போகும். ராமசாமி **USA**க்கு போகும்பொழுது கடைசிவரை யாருக்கும் தெரியாது. ஊருக்குப் போகும்பொழுது சொல்லிவிட்டுப் போனான். அவன் பெரியப்பா பையன் **US** ஆர்டர் வந்தவுடனே எல்லாரிடமும் சொன்னான். வருஷம் 2 ஆயிற்று. ஒன்றும் வரவில்லை.

அண்ணன் - ராமசாமிக்கு படிப்புள்ளது. இவனுக்கு எதுவுமில்லை. இவனுக்கு எப்படி **US** ஆர்டர் வந்தது என நினைப்பார்கள். அதனால் இவன் சொல்லியது தவறாகப் போய்விட்டது.

தம்பி - ராமசாமிக்கு போகணும் என்பது முக்கியம். சொல்லணும் என்பதில்லை. இவனுக்கு போவதைவிட, சொல்ல வேண்டும் என்பது முக்கியம். அதனால் இவன் சொல்வது தவறு.

அண்ணன் - இவனால் சொல்லாமலிருக்க முடியாது. அதனால்தான் தவறு வருகிறது.

தம்பி - **Discipline** அதுதான், சொல்வது சரியா, தப்பா என்பதில்லை. சொல்லும் மனப்பான்மை சரியா, தப்பா என்பதே முக்கியம். இப்படிச் சொன்னால் புரியும்.

அண்ணன் - புரியும் என்பது சரி, புரிந்தால் செய்வார்களா? எப்படிச் சொன்னால் செய்வார்கள் என ஒரு முறையிருக்கிறதா? எல்லாருக்கும் சொல்ல முடியாது. எல்லாவற்றையும் சொல்லமுடியாது.

சொல்ல வேண்டும். அவர் பயன்பட வேண்டும் என்று நினைப்பதே சரியில்லை என்றல்லவா பகவான் கூறுகிறார்.

தம்பி - எனக்கு அதுபோல் சொல்வது **selflessness** பரநலம். உங்கள் **discipline**க்கு அது தவறு. பிறர் பயன்பட வேண்டும் என்பதே ஆசை என்பது உங்கள் நிலை. அப்படியானால் சட்டம் எது என்று தெளிவாகச் சொல்லமுடியுமா? நம் அனுபவத்தைப் பார்ப்போம். எத்தனை பேருக்கு வந்தது? யார் யாருக்குக் கூடிவரவில்லை என்று பார்த்தால்,

1) எதுவும் செய்யாத சாமர்த்தியசாலிக்கு 26 **award** விருது வந்தது. இது நமக்குத் தெரியும் எப்படி வந்தது என்று. இவருக்கு அன்னையைத் தெரியாது. ஆனால் அன்னை சக்தி இவரிடம் பலனாக தவறாமல் வருகிறது. ஏராளமான பொய், திருட்டுத்தனம். அதை மீறி மனிதர் பெரிய பிரபலமடைகிறார். காரணம் என்ன? யாரும் காதில் வாங்கிக் கொள்ளாத இலட்சியத்துக்கு, இவர் முழு ஆதரவு கொடுத்தார். அதன் மூலம் உலகுக்கு அன்னையின் இலட்சியம் பலித்தது. பெரிய சேவையல்லவா? இவருடைய **receptivity** சேவைக்குத் தரும் ஆதரவு, இவர் பொய், பித்தலாட்டத்தைவிடப் பெரியது என்றாகிறது. இவரே அன்னையிடம் நெருங்கியவரானால், இப் பொய் இவர் வேலையை ரத்து செய்திருக்கும்.

2) 800 கோடி திட்டம் அமெரிக்கருக்கு முடிவாயிற்று. மகன் மூலமாக வந்தது. அவர் மகனுக்கே உண்மையாயில்லை. இல்லை என்றாயிற்று.

3) ஆபீஸ் குமாஸ்தாவுக்கு அமெரிக்க ஸ்காலர்ஷிப் வந்தது. விஷயம் முடிவதற்குள் நிலையிழந்து போனார். தவறிவிட்டது.

4) தொழிலில் இலாபம் 6 மாதத்தில் 10 மடங்காயிற்று. அவர் எல்லாம் தெரிந்திருந்தும் தன்னை அழிக்க விரும்புபவர்கள் பாராட்ட வேண்டும் என்று நினைத்தார். ஆபத்தாயிற்று.

5) போட்ட முதல் **1½** வருடத்தில் 18 மடங்கு உயர்ந்தது. உதவி செய்தவரையே தூற்ற ஆரம்பித்ததால், பலனில்லாமல் போயிற்று.

6) கம்பனியை மூட வேண்டிய நிலை வந்தபின், அன்னையிடம் வந்தவரையும், கம்பனியையும் அன்னை காப்பாற்றினார். கொடுத்த வாக்கைப் பூர்த்தி செய்யவில்லை. வேலையும் பூர்த்தியாகாமலிருக்கிறது.

7) பம்பாய் தொழிலதிபருக்கு ரூ. 2000 கோடி கடனுக்கு ஏற்பாடாயிற்று. கையெழுத்தாக அனைவரும் சந்தித்தனர். எதிரியை அனுமதித்தார். ரத்தாய்விட்டது.

அண்ணன் - எதிரிக்கு அந்த நேரம் எப்படி விஷயம் தெரிகிறது?

தம்பி - தெரிவது அப்புறமிருக்கட்டும். ஏற்பாடு செய்தவருக்கு இவர் எதிரி, நண்பனாக நடிப்பவர் எனத் தெரியுமல்லவா? அவரைப் பார்க்க மறுக்கக்கூடாதா?

அண்ணன் - கையெழுத்து எங்கோ போடுகிறார்கள். எதிரிக்கு சூட்சுமமாக ஏதோ நடக்கிறது, நாம் போனால் கெடும் என புறப்பட்டு வருகிறார். அது ஏற்பாடு செய்தவருக்கு

தெரிகிறது. எப்படி, பார்க்க மாட்டேன் என்பது தயக்கம். எவ்வளவு பெரிய விஷயம் கெட்டுவிட்டது. இதென்ன தயக்கம். தப்பில்லையா?

தம்பி - மறுத்திருந்தால் கூடி வந்திருக்குமா? இவர் பார்க்க மாட்டேன் என்பதால் எதிரி கோபப்பட்டால் கெட்டுப் போகாதா?

அண்ணன் - பயந்து மறுத்தால் கோபம் வரும், கெட்டுப்போகும். நிதானமாக மறுத்தால் கெட்டுப் போகாது.

தம்பி - எதிரி வரக்கூடாது. வந்த பிறகு காரியம் வீணாகும்.

அண்ணன் - நிதானமாக மறுத்தால், காரியம் கெடாது.

தொடரும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

பாதுகாப்பு - Protection

இளமையில் தெம்புள்ளபொழுது பட்டினி கிடந்தாலும் உடல் வளரும். வியாதி வரும் போகும். பாதிக்காது. காயம்பட்டால் தானே ஆறும். இளமை அளவுகடந்த தெம்புள்ள நேரம். செல்வர் பிள்ளைகள் வீண் செலவு செய்தால் வீட்டில் வசதி குறையாது. நஷ்டம் வந்தால் தொழில் பாதிக்கப்படாது. உபரி வருமானம் வரும்பொழுது பணவிஷயத்தில் ஆயிரம் தவறு நடந்தாலும் அடிப்படை அந்த நேரம் ஆட்டம் காணாது. இதனால் பட்டினி கிடக்க வேண்டும், காயத்தைக் கவனிக்கக்கூடாது, பணத்தை விரயம் செய்ய வேண்டும் என்று பொருளன்று. உபரி தெம்பு, உபரி வருமானம் வரும்பொழுது, உடல் பாதிக்கப் படுவதில்லை. வீட்டு வசதி குறைவதில்லை. பட்டகாயம் துருப்பிடித்த இரும்பால் பட்டிருந்தால், கவனிக்காமல் விட்டிருந்தால் **tetanus** ஜுரம் வரும். மறுநாள் உயிர் போகும். பணவிரயம் ரேஸ் மூலம் வந்திருந்தால், முழுச் சொத்தும் போய்விடும்.

அன்னை அன்பர்கள் பாஸ்போர்ட் இல்லாமல் விமானம் ஏறினாலும், கப்பலுக்கு லேட்டாக வந்து கப்பல் தவறினாலும், செய்யும் செலவில் பாதி வருமானமாக வரும் சொத்தை வாங்கினாலும், எதிரியை நண்பனாக நம்பி வேலை போனாலும், "உன்னை மட்டும் இந்த ஆண்டு பெயிலாக்கப் போகிறோம்" என்று எச்சரித்தபின் படிக்க மறுத்தாலும், அறிவில்லாமல் எந்தத் தவறு செய்து கஷ்டம் வந்தாலும், பிரார்த்தனைக்குப்பதிலாக அன்னை காப்பாற்றத் தவறியதில்லை.

அன்னைக்குத் துரோகம் செய்தவர்க்கு உபகாரம் செய்தாலும், நம் உதவியைப்பெற்று அதை நமக்கு எதிராகப் பயன்படுத்த அன்னைக்குத் துரோகம் செய்தவருக்கு அதை அளித்தாலும், நமக்கு வேண்டியவர் நாம் அழிய நினைத்தாலும், நம் சக்தியும் தெம்பும் நம்மை அழிக்க நாமே பிறரை அனுமதித்தாலும், துரோகிக்கு சேவை செய்தாலும், அருள் செயல்படமுடியாது. அன்னையால் காப்பாற்ற முடியாது.

* அன்னைக்குத் துரோகம் செய்தவரையும், நமக்குத் துரோகம் செய்தவர்களையும் விட்டு விலகுதல் நம் கடமை. நாம் விலகாமலிருப்பது நாம் அன்னைக்குச் செய்யும் துரோகமாகும்.

பாதுகாப்பு விஸ்வாசத்திற்கு.

எந்த ரூபத்தில் துரோகம் எழுந்தாலும் பாதுகாப்பு விலகும்.

ஐந்நூறு ரூபாய்

1927ஆம் ஆண்டு ஒருவர் தன் மனைவியுடன் ஆசிரமத்தில் சேர்ந்தார். அதற்குமுன் கொஞ்சநாளாக அவர் ஆசிரமம் வந்து போகும் வழக்கம் உண்டு. நிரந்தரமாக வந்து இங்கேயே தங்க வேண்டுமானால், சுமார் 1000 மைலிலிருந்து வர அவருக்குக் செலவுண்டு. அங்குள்ள கடமைகளைப் பூர்த்தி செய்யாமல் ஆசிரமம் வரமுடியாது. இவையிரண்டிற்கும் உரிய தொகை அன்று அவர் கணக்குப்படி ரூ. 500/-. இவர் வருமானமுள்ள தொழில் செய்பவரில்லை. ஏதோ உள்ள வசதியை வைத்துக் கொண்டு படிப்பின் சிறப்பால் எழுத்தாளராக இருப்பவர்.

1990இல் இந்து பத்திரிகையில் எழுதிய நீண்ட கட்டுரைக்கு சன்மானம் ரூபாய் 250/-. 1927இல் இதே கட்டுரைக்கு ரூ5/- அல்லது ரூ. 10/- கொடுத்திருப்பார்கள். அன்னையிடம் தன் நிலைமையைச் சாதகர் விளக்கினார். அன்னை சம்மதித்தார். சம்மதித்தார் எனில் அவர் எண்ணம் பூர்த்தியாகும் என்றார்.

அவர் ஊர் திரும்பிய கொஞ்சநாள் கழித்து, அமெரிக்காவிலி ருந்து அவரை ஒரு கட்டுரை எழுதச் சொல்லி 500/- ரூபாய் சன்மானம் தருவதாகச் சொன்னார்கள்! தொகை அதிகமாக இருப்பதைக் கண்டு அன்னை சொல் பலித்ததாக அவர் ஆச்சரியப்பட்டார். கட்டுரை எழுதினார். அனுப்பினார். சன்மானம் வந்தது. இனி ஊரைவிட்டு ஆசிரமம் போக வேண்டியதுதான். மீண்டும் அமெரிக்காவிலிருந்து கடிதம் வந்தது. அவர் கட்டுரை தேவைப்படவில்லை எனவும் அது தேவைப்பட்ட **project** ஐக் கைவிடப் போவதாகவும் கடிதம் சொல்லியது. மேலும் அப்பணத்தை அவர் திரும்பித் தரவேண்டாமெனவும், கட்டுரையை வேறு ஒரு சமயம் பயன்படுத்திக் கொள்வதாகவும் கூறியது.

சூழ்நிலையில் இல்லாத சந்தர்ப்பத்தை உற்பத்தி செய்து சாதகரின் தேவையைப் பூர்த்தி செய்வது அன்னையின் திறன் என்பதற்கு இது ஓர் உதாரணம்.